www.padippakam.com


# புதிய கலாச்சாரம்

ஜூன் - 2002
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00




ஓவியர் உதயன் மறைவு: துணிவில் தோய்ந்த தூரிகை!




அழகி: ஒரு அற்ப மனிதனின் அவலம்



அயோத்தி: அடிக்கல் மோசடி அடிமனையும் மோசடி!




# தனியார்மயமாகும் கல்வி:

# புதிய மனுதர்மம்


படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம்: ஆவி-ஆன்மா-மறுபிறப்பு

# "பார்ப்பன உடம்பில் பறைய இதயம்"

**1897 ஆம் ஆண்டில் ஒரு கிறித்தவப் பாதிரியாரின் மகனாகக் கேரளத்தில் பிறந்தவர் கோவூர். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறைப் பேராசிரியராகவும், இலங்கைப் பகுத்தறிவாளர் கழகத்தின் தலைவராகவும் பணியாற்றி 1978-இல் மறைந்தார். தந்தை பெரியாரின் இயக்கத்தின் மூலமாக தமிழ்நாட்டிலும் பெரும்புகழ் பெற்றவர். ஒவ்வொரு கூட்டத்தின் ஆரம்பத்திலும் ''கடவுள் உண்டு என்று கூறுவோர் இங்கே வந்து கடவுளை மெய்ப்பித்துக் காட்டலாம். காட்டியபின் ஒரு இலட்சம் ரூபாயைப் பெற்றுச் செல்லலாம். யாராவது இருக்கிறீர்களா?'' என்று சவால் விடும் கோவூரின் அறிவிப்பு மிகவும் பிரபலமான ஒன்று. கடவுள், மதம், மூடநம்பிக்கை குறித்து பல்வேறு ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். தமிழில் வெளிவந்திருக்கும் கோவூரின் இந்நூலிலிருந்து ஒரு பகுதியை இங்கே வெளியிடுகிறோம்.**



ஆபிரகாம் டி. கோவூர்

கருப்பு நீக்ரோவான ஹவுட் என்பவரின் 'பறைய' இதயம் வெள்ளை ஆப்பிரிக்கரான பிளெய்பெர்க் என்பவரின் 'பார்ப்பன' உடம்புக்குள் அறுவை மூலம் மாற்றிப் பொருத்தப்பட்டுள்ள செய்தி, நிறவெறி பிடித்த தென்னாப்பிரிக்காவில் மட்டுமல்ல, சாதிவெறி பிடித்த இலங்கையிலும் அதற்கு அண்ணனாகிய அண்டை நாடு இந்தியாவிலுமே ஒரு சமுதாயப் புரட்சியைத் தொடங்கி வைக்கப் போவது உறுதி.

வெள்ளை ஆப்பிரிக்கர் கருப்பு நீக்ரோவை மணப்பதோ கருப்பர் வெள்ளையரை மணப்பதோ தென் ஆப்பிரிக்காவில் தண்டனைக்குரிய குற்றமாகும். வெள்ளை ஆப்பிரிக்கரும் கருப்பு நீக்ரோவும் ஒரே படுக்கையைப் பகிர்ந்து கொள்வதையே தடை செய்திருக்கும் ஒரு நாடு, இருவரும் ஒரே உடம்பைப் பகிர்ந்து கொள்வதை எப்படிச் சகித்துக் கொள்ளும்?

ஒரு பறையரின் 'தீண்டத்தகாத' உடம்பை சும்மா தொடுவதாலேயே 'தீட்டுப்' பட்டுவிடும் நம்நாட்டுப் பார்ப்பனன் ஒருவன், சாகும் நிலையில் இருக்கும் தன் 'பார்ப்பன' உடம்புக்குள், நல்ல நிலையில் இருக்கும் ஒரு 'பறைய' இதயத்தை மாற்றிப் பொருத்துவதன் மூலமும் தன் உடலின் புனிதம் கெட்டுப் போவதை எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? தனக்குள் ஒரு 'தீண்டத்தகாத' பறைய இதயத்தைப் பொருத்துவதன் மூலம் நிரந்தரமாகத் தீட்டுப்பட்டுப் போவதைவிட சுத்த பிராமணனாகச் செத்துப் போவதையே அவன் விரும்பலாம்! நிலையற்ற இந்த 'சம்சாரத்தை' நீட்டிப்பதற்காக நிச்சயமான ஒரு சுவர்க்கத்தைத் தெரிந்தே இழக்க எப்படி அவன் துணிய முடியும்?!

ஆண்டுதோறும் ஹவுட்டின் நினைவு நாள் அன்று அவரது இளம் மனைவி, தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற அந்த கருப்பரின் கல்லறைக்குப் போய் வரலாம். தன் அன்புக் கணவரின் சமாதிமேல் மலரும் மெழுகுத்திரிகளும் வைத்து அஞ்சலி செலுத்தலாம். கணவரின் கல்லறை மீது ஒரு பிரியா விடை முத்தமும் கூட அவள் கொடுக்கலாம்.

தன் கணவரின் இதயம் 'கொலு வீற்றிருக்கும்' உடலைத் தரிசிக்க ஆண்டுக்கொருமுறை திருமதி ஹவுட் - ஒரு கருப்பி - வந்து போவதை வெள்ளையனான பிளெய்பெர்க் அனுமதிப்பாரா? தன் அன்புக் கணவரின் இதய பீடத்தின்மேல் திருமதி ஹவுட் ஒரு பிரியா விடை முத்தம் தருவதை அந்த வெள்ளையனின் நிறவெறி சகித்துக் கொள்ளுமா?

இதயத்துக்குப் பதிலாக, ஹவுட்டின் இனப்பெருக்க சுரப்பிகள் (விதைகள்) பிளெய்பெர்கின் விதைப் பைக்குள் வைத்துப் பொருத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். என்ன பிரச்சனை எழும்? சற்று சிந்தித்துப் பார்க்கலாமா?

அதன்பின் பிளெய்பெர்க் தம்பதியருக்குப் பிறக்கும் குழந்தைகள், இறந்து போன கருப்பரான திரு. ஹவுட், வெள்ளை ஆப்பிரிக்கரான திருமதி பிளெய்பெர்க் ஆகியோரின் மரபுப் பண்புகளைத்தான் பெற்றிருக்குமே தவிர, பிளெய்பெர்கின் மரபுப் பண்புகளைப் பெற்றிரா.

தம் காம இச்சையைத் தணித்துக் கொள்வதற்காக கூடிக் கொள்வது வேண்டுமானால் பிளெய்பெர்க் தம்பதியினராக இருக்கலாமே தவிர, திருமதி பிளெய்பெர்கின் உடலில் உள்ள சினை முட்டை கருவுறுவது, பிளெய்பெர்கின் விதைப்பையைச் சார்ந்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் ஹவுட்டின் விதைகளிலிருந்து வரும் விந்தணுக்களால்தான் இருக்கும்.

ஒரு திசுவை இடம்மாற்றிப் பொருத்தும்போது, பெயர்த்துப் பொருத்தப்படும் திசு, அதை ஏற்பவரின் உடம்புடன் பொருந்திப் போகலாம்; இசைந்து வாழும் ஒட்டுயிர்கள்போல் இருதரப்பு வளர்சிதை மாற்றத்தில் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ளலாம் - ஆனால் மரபுப் பண்பு ரீதியாக அவை ஒன்றிணையா. ஆக ஒட்டுறுப்புக்கும் அதை ஏற்பவருக்கும் இடையே மரபுப் பண்பு ரீதியான ஒன்றிணைப்பு இல்லாமையால், ஒட்டிப் பொருத்தப்பட்ட விதைகளின் விந்தாக்க அணுக்களில் (ஸ்பெர்மெட்டோசைட்ஸ்) இருக்கும் நிறப்புரிகளும்

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

### அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகர்களே,**

**தவிர்க்கவியலாத காரணங்களினால் அடுத்த ஜூலை மாத இதழ் வெளிவராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆகஸ்டு 2002 முதல் இதழ் மாதந்தோறும் வெளிவரும்.**



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 20
• குரல்: 1
• ஜூன் - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-3718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# ஆயுதமேந்தாமல் ஓட்டளிக்க முடியாதெனில் ஓட்டு எதற்கு? புரட்சி செய்!

"ஓட்டுப்போட முடியல, அப்புறம் வெட்டியா எதுக்கு இந்த அடையாள அட்டை" என்று வெறுப்பும் ஆத்திரமும் ததும்பக் கேட்டுக் கொண்டே அமுதவாணி என்ற பெண் வாக்காளர் தனது புகைப்பட அடையாள அட்டையைக் கிழித்துக் குப்பையில் போட்டபடி நடந்தார். சைதைத் தொகுதி இடைத்தேர்தலில் வாக்களிக்கப் போனபோது அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை என்று கூறி விரட்டப் பட்டதால் இந்த ஆத்திரம்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தும், அடையாள அட்டையுடன் வரிசையில் நின்றிருந்த பலரை போலீசார் தடிகளைச் சுழற்சி வீசி அடித்து விரட்டுவதை வானொளிக் காட்சிகள் காட்டின. ஓட்டுரிமையின் மகத்துவம், புனிதம் பற்றியெல்லாம் செய்தி ஊடகங்களில் உபதேசம் செய்யும் உதயமூர்த்திகள், சிவசங்கரிகள்தாம் இனி அமுதவாணிகள் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்க வேண்டும். ஆனால் அவர்கள் மூடி மறைக்கும் ஒரு யதார்த்தம் என்னவென்றால், இனி, வாக்காளர்கள் தமது வாக்குரிமையை நிலைநாட்டுவதற்கு, புகைப்பட அடையாள அட்டையுடன் மட்டும் போனால் போதாது, அரிவாள், உருட்டுக் கட்டை முடிந்தால் துப்பாக்கியுடன் போக வேண்டும் என்பதுதான் அந்த யதார்த்தம்.

சைதை இடைத்தேர்தல் நாளன்று நடந்த சம்பவங்கள் ஜெயலலிதா கும்பல் மற்றும் அவரது கள்ளக் கூட்டுக்காரர்களைத் தவிர அனைவரையும் விக்கித்து நிற்கச் செய்து விட்டன. ஓட்டுப்பதிவு தொடங்கிய சில மணிகளிலேயே அ.தி.மு.க. அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், வாரியத் தலைவர்கள், கட்சி நிர்வாகிகள் தலைமையில் கும்பல் கும்பலாக ரௌடிகள் - கிரிமினல்கள் - கள்ள வாக்காளர்கள் வாக்குச் சாவடிகளின் முன்பு வந்திறங்கினர். வரிசையில் காத்திருந்த வாக்காளர்கள் அடித்து விரட்டப்பட்டதில் போலீசாரும் சேர்ந்து கொண்டனர். கொலை மிரட்டல்களுக்கு நடுங்கிய படி எதிர்த்தரப்பு முகவர்கள் வாக்குச்சாவடிகளை விட்டு ஓடிப் போயினர்.

கட்டுக்கட்டாக போலிச் சாதிச் சான்றிதழ்கள், போலி ரேசன் அட்டைகளை வாகனங்களில் ஆளுங் கட்சியினர் ஏற்றி வந்தனர். வாக்குச் சாவடி வாசல்களிலேயே நின்று ஆளுங்கட்சி கும்பலை அழைத்து கூவிக் கூவி விநியோகித்தனர்.

50 வயது மூதாட்டி 28 வயது பெண்மணியாகவும், 30 வயதுக்காரி 60 வயதுக்காரியாகவும், 20 வயது இளைஞர் 42 வயது முதியவராகவும் காட்டி ஓட்டுப் போட்டனர். கார்களில் காத்திருந்த தாசில்தார்கள், கோட்டாட்சியர்கள் தேவையான அளவு கையொப்பமிட்ட சான்றுகளை வழங்கிக் கொண்டே இருந்தனர்.

அதிமுக பிரமுகர்கள், கள்ள ஓட்டுப் போடுவதற்காக, 30,40 பேரைக் கொண்டு வந்து வரிசையாக நிறுத்தினர். ஒரே பூத்தில் வாக்களிக்க வேண்டுமானால், சில நிமிடங்கள் காத்திருக்க நேரிடும் என்பதால், 'பக்கத்து பூத் காலியாக இருக்குது... பாதிப்பேர் அதுலபோய் போடுங்கப்பா' என்று வழி காட்டினார்.

"எல்லாவற்றுக்கும் மேலாக, இதே வளாகத்தில் ஒரு பூத்தில், கள்ள ஓட்டுப்போட வந்தவர்கள் காத்திருக்கும்போதே அதிகாரியும் - ஏஜெண்டும் பட்டனை மாறி மாறி அமுத்தி வாக்குகளைப் பதிவு செய்ததுதான் ஹைலைட்" என்கிறது தினமணி.

இத்தனையும் கள்ளத்தனமாக நடக்கவில்லை. பகிரங்கமாக நடந்திருக்கிறது. மத்திய ரிசர்வ் படையோடு வந்த தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்புக் குழு பார்வையாளர்கள் முன்னிலையில்தான் நடந்திருக்கிறது. ஆனால், இவர்கள் நடந்த அராஜகம் குறித்து கண்டுகொள்ளாமல் இருந்து ஆளுங்கட்சியோடு ஒத்துழைத்துள்ளனர். இது எப்படி நேர்ந்தது? தேர்தல் ஆணையம் உட்பட அனைவரும் விலை போய்விட்டனரா? அல்லது "தேர்தல்களில் இப்படிப்பட்ட அராஜகம் சகஜமானதுதான்; எவ்வளவு அராஜகம் நடந்தாலும் அமைதியாகத் தேர்தல்கள் நடந்து முடிந்தன" என்று அறிக்கை தருவதுதான் தமது பணி என்று இருக்கின்றனரா?

இந்தக் கேள்விகளுக்கு வாக்காளர்கள் விடைதேடிப் போய்விடக் கூடாது என்பதற்காக, எதிர்க்கட்சிகள் எல்லாம் பெருங்கூச்சல் போட்டபிறகு ஒரு கண்துடைப்பு விசாரணையும், 58 வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவும் நடத்தப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்குமேல் பூட்டிய அறைக்குள் இரவு பகலாக விசாரணை நடத்தி விசாரணை அதிகாரிகள் என்ன கண்டுபிடித்தார்கள்? என்ன காரணத்துக்காக இந்த மறுவாக்குப்பதிவு நடத்தினார்கள்? எதிர்க் கட்சியினர் கூறிய புகார்கள், குற்றச் சாட்டுகள் இந்த 58 வாக்குச் சாவடிகளைப் பொருத்தவரை உண்மைதானென்று ஏற்று கொண்டார்

படிப்பகம்

www.padippakam.com

களா? இல்லை, ஜெயலலிதா கூறுவதைப் போல கருணாநிதியைத் திருப்திபடுத்து வதற்காக நடத்தினார்களா?

''மறு வாக்குப் பதிவின்போது சாதிச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது, அண்டை மாவட்டத்தைச் சேர்ந்த தேர்தல் அதிகாரிகள் மறுவாக்குப் பதிவை நடத்துவார்கள்'' என்று தேர்தல் ஆணையம் கூறுகிறது. அப்படி யென்றால் முதல் வாக்குப் பதிவின்போது போலிச் சான்றிதழ்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன; தேர்தல் அராஜகத் துக்கு தேர்தல் அதிகாரிகளே உடந்தை யாக இருந்தனர் என்ற இரு புகார்கள் உண்மைதான் என்று ஏற்கின்றனரா? போலிச் சான்றிதழ்கள் கொடுத்த அதிகா ரிகள், தேர்தல் அராஜகத்தை அனுமதித்த அதிகாரிகள் மீது இந்தக் குற்றங்கள் புரிந்த ஆளுங்கட்சியினர் மீதும் என்ன நடவடிக்கைகள்?

ஏற்கனவே சைதை, வாணியம்பாடி, ஆண்டிப்பட்டி ஆகிய தொகுதிகளில் போலி வாக்காளர் சேர்க்கைப் புகார் கூறப் பட்டு, தேர்தல் ஆணைய அதிகாரிகள் விசாரணை நடத்தினர். சைதை, வாணி யம்பாடி தொகுதிகளில் போலி வாக்கா ளர்கள் சேர்க்கப்பட்டது உண்மைதா னென்று நிருபணமாகி தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டன. இந்தத் தவறுகள் புரிந்த அதிகாரிகளுக்கு இடமாற்ற நடவ டிக்கை என்கிற பெயரில் பதவி உயர் வுகள் அளிக்கப்பட்டன. ''அவ்வளவு பெரிய தவறுகள் நடக்கவில்லை'' என்று தேர்தல் ஆணைய அதிகாரியே ஒப்புக் கொண்ட ஆண்டிப்பட்டி தேர்தல்கள் பல்வேறு தில்லு முல்லுகளுக்கிடையே நடந்து ஜெயலலிதா மீண்டும் முதல்வ ரானார். இப்படிப்பட்ட தேர்தல் அராஜ கங்களுக்கு ஒத்திகை பார்ப்பதைப் போல உள்ளூராட்சி தேர்தல்களை ஆளும் கட்சி தாதாக்களும் போலீசும் நடத்தினர்.

இவற்றில் நகைப்புக்குரிய முக்கிய மான விசயம் தி.மு.க., பா.ம.க மற்றும் இரு போலி கம்யூனிஸ்டு கட்சிகள் உட்பட எதிர்த்தரப்பினரது கையாலாகாத் தனம்தான். அவமானகரமான தோல்வி களைத் தவிர்ப்பதற்காக தேர்தல்களில் போட்டியிடாது ஒதுங்கிக் கொண்ட காங்கிரசு - த.மா.கா.வினர் இந்தத் தேர்தல் அராஜகங்களைப் பெயரள விற்குக் கண்டிப்பதோடு நிறுத்திக் கொண்டனர். வரலாறு காணாத மோசடி, அராஜகம், கேலிக் கூத்து என்று கூறும் சி.பி.(எம்) கட்சி வாக்கு எண்ணிக் கையைப் புறக்கணிப்பதாகக் கூறி முழு மையாக மறுதேர்தல் நடத்தும்படி கோரி யது; இதற்காக அடுத்த நாளே சைதையில் ஒரு கூட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியது.



கருணாநிதியும் இராமதாசும் காட்ட மான அறிக்கைகள், பேட்டிகள் கொடுத் தனர். இரண்டு கட்சிகளின் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் உண்ணாவிரதமிருந்தனர்; குடியரசுத் தலைவரிடம் மனுக் கொடுத்தனர்; தேர்தல் ஆணையத்துக்கு கடிதம்மேல் கடிதம் கொடுத்தனர்; வட்டாரத் தலைநக ரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். வருந்தி வருந்தித் தவமிருந்து கடைசியில் குழவிக் கல்லைப் பெற்றெடுத்தது போல 58 வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு என்ற கண் துடைப்பு நிவாரணம் பெற்றனர். இனி என்ன செய்யப் போகி றார்கள்? இதுதான் கேள்வி.

ஜெயலலிதா கட்சியின் கிரிமினல் - அராஜகத்தில் மிகவும் பாதிக்கப்படும் ஓட்டுக் கட்சி தி.மு.க. என்பதால் அது நிறையவே கூச்சல் போட்டு புழுதி கிளப் பியது. ''மாநகராட்சி தேர்தல்கள் போன்ற தல்ல இது; மத்திய தேர்தல் ஆணையமே நடத்துவது, இதில் தில்லுமுல்லுகள் நடக் காது'' என்று கூறி அணிகளுக்கு நம்பிக் கையூட்டினர். அராஜகம் நடந்தால், திமு கவினர் எதிர்த்து முறியடிப்பார்கள், நானே ரத்தம் சிந்தவும் தயாராக இருக் கிறேன்'' என்று சூளுரைத்தார் கருணா நிதி. தேர்தல் ஆணையத்திடம் புகார் மேல் புகார் செய்தார், எச்சரிக்கை விடுத்தார். மத்தியப் போலீசை அனுப்பும் படி கோரினார். இவை எதுவும் ஜெயல லிதா கும்பலின் அராஜகத்தைத் தடுத்திட வில்லை.

● ● ●

***பீகார், உ.பி. போன்ற மாநிலங்களின் தொலைதூர கிராமங்களில் நடந்து வரும் தேர்தல் அராஜகங்களை சென்னை போன்ற மாநகரங்களில் அரசு - கட்சி என்ற முழு இயந்திரத்தைக் கொண்டு செய்து காட்டியதன் மூலம் கிரிமினல் அரசியலில் நாட்டுக்கே முன்னோடி யாக ஜெயலலிதா வளர்ந்துள்ளார்.***

● ● ●

''ஜெயலலிதா ஒரு பெண் முஷாரப். அவர் நடத்தியதைப் போல போலி ஜன நாயகத் தேர்தல்தான் நடந்தது. ஜனநாய கத்துக்கு ஆபத்து வந்துவிட்டது'' என்பதை மக்களுக்கு தெரிவிப்பதாகக் கூறி தனது பிறந்த தினத்தை துக்கதினமாக அறிவித்தார். ''தேர்தல் ஆணையம் பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறது, அம்பலப்படுத்த நேரிடும்'' என்று எச்ச ரித்தார்.

''இப்படிப்பட்ட தேர்தல் அராஜ கங்கள் நீடித்தால், ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டால் மக்கள் நக்சலைட்டு களாக மாறுவார்கள்'' என்றும் கருணாநிதி கூறி இருக்கிறார். சினிமாக்காரர்கள் முதல் ஓட்டுப் பொறுக்கிகள் வரை பலரும் தங்களுக்கு நெருக்கடி வரும் போது ''நக்சலைட்டுகளாக மாறுவோம்'' என்று கூறுவதன் மூலம் புரட்சிகர இயக் கங்களைக் கொச்சைப்படுத்துகின்றனர். பாட்டாளி வர்க்க அரசியல் - சித்தாந் தத்தை அடிப்படையாகக் கொண்ட புரட் சிகர இயக்கம், நாடாளுமன்ற - சட்ட மன்ற, ஜனநாயக முறையின் போலித்த னத்தைப் புரிந்து கொண்டு, அரசியல் - பொருளாதார - சமூக மாற்றங்களை புரட் சியின் மூலம் மட்டுமே சாதிக்க முடியும் என்று நம்புகிற இயக்கம். ஓட்டுப் பொறுக்கவும், பிழைப்புவாத அரசியல் நடத்தவும் ஆயுதம் ஏந்துபவர்கள் கிரிமி னல்களேயன்றி நக்சல்பாரிகள் அல்லர்.

பீகார், உ.பி. போன்ற மாநிலங்களின் தொலைதூர கிராமங்களில் நடந்து வரும் தேர்தல் அராஜகங்களை சென்னை போன்ற மாநகரங்களில் அரசு - கட்சி என்ற முழு இயந்திரத்தைக் கொண்டு செய்து காட்டியதன் மூலம் கிரிமினல் அர சியலில் நாட்டுக்கே முன்னோடியாக ஜெயலலிதா வளர்ந்துள்ளார். ''வாக்குரி மையின் மூலம் மக்கள் தமது அதிகா ரத்தை நிறுவ முடியாது'' என்று ஏற்க னவே நிரூபிக்கப்பட்ட உண்மையை ஜெயலலிதா மீண்டும் ஒருமுறை உணர்த் தியிருக்கிறார்.

ஆயுதங்களோடு போய் ஓட்டுப் போட்டுத்தான் மக்கள் வாக்குரிமையை நிலை நாட்ட முடியும் என்றால் ஆயுதங் களை வைத்துக் கொண்டு நேரடியாகவே, கீழிருந்தே மக்கள் தமது அதிகாரத்தை ஏன் நிறுவக் கூடாது? அப்படிச் செய்தால் ஓட்டுக் கட்சிகள் என்கிற அரசியல் தரகர் களுக்கு வேலையில்லாமல் போய் விடும். இதற்கு அஞ்சித்தான் கருணாநிதி, ராமதாசு, சங்கரய்யா, நல்லக்கண்ணு போன்றவர்கள் மீண்டும் மீண்டும் இந்த போலி ஜனநாயகத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடாதபடி கவன மாகப் பேசுகிறார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# அழகி: ஒரு அற்ப மனிதனின் அவலம்!

“கண்ணீர் வடிப்பதென்பது சிந்திப்ப தாகும்'' என்றார் ஒரு கலை விமரிசகர். ''ஒரு கலைப்படைப்பில் துன்பியல் நாய கனின் அனுபவத்தில் பங்கு பெற்று அவ னுக்காக அனுதாபப் படுகையில் தான் படும் சொந்தத் துன்பத்தின் மூலமாக ரசிகன் தூய்மைப்படுத்தப் படுகிறான். அவனுடைய வாழ்வு ஒரு உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படுகிறது'' என்பது இதன் பொருள்.

தமிழ் மக்கள் தம் அன்றாட வாழ்வில் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரைக் காட்டிலும், சொந்த வீட்டு எழவுக்கு அழுத கண்ணீரைக் காட்டிலும் அவர்கள் சினிமாக் கொட்டகையில் சிந்திய கண்ணீர் அதிகம்.

''கண்ணீர் வடிப்பது என்பது சிந்திக்க மறுப்பதாகும்'' என்பதுதான் நாம் அனுப வத்தில் கண்டிருக்கும் உண்மை.

'அழகி' படத்தைப் பற்றிக் கேட்டால், 'நல்ல படம்', 'அழகான சித்தரிப்பு', 'சொல்ல வந்த கதையை அழகாய்ச் சொல்லியிருக்கிறார்' என்று ராஜ தந்திரி களின் மொழியில் பலர் கருத்துக் கூறுகின் றனர்.

''அழகான ரோஜா மலரொன்றைக் கண்டேன்'' என்று சொல்பவரிடம் ''ரோஜா மலர் என்ன கருத்தைச் சொல்ல முயல்கிறது?'' என்று நாம் கேட்கப் போவதில்லை. அது அழகை நுகர்கின்ற அனுபவம். அவ்வளவே.

ஆனால் அழகி எனும் திரைப்படம், வெறும் அழகு நுகர்ச்சி அனுபவம் அல்ல. ஒருவேளை கருத்துக் கூற முடி யாத அளவுக்கு அந்த அழகியல் அனுப வத்தில் ரசிகன் கிறங்கி விட்டான் என்றால், அத்திரைப்படம் கூறும் கருத்தும் வெளிப்படுத்தும் உணர்ச்சியும் அவனுக்குள் நெருடல் ஏதுமின்றி இறங் கிவிட்டதென்றே பொருள். எனவே, விம ரிசனம் அவசியமாகிறது.

***

படத்தின் பெயர் 'அழகி'யானாலும், கதாநாயகன் சண்முகத்தின் (பார்த்திபன்) துயரம் தோய்ந்த முகம்தான் படத்தின் மையப் பாத்திரம். ஆரம்பப் பள்ளியில் சிநேகிதமாகத் தொடங்கி உயர்நிலைப் பள்ளியில் காதலாக வளர்ந்த தனலட்சுமி - சண்முகத்தின் உறவு திடீரென அறுபடு கிறது. டாக்டர் படிப்புக்கு சண்முகம் சென்னை போக, இரண்டாம் தாரமாகத் தன் அக்காள் புருசனுக்கே வாழ்க்கைப் படுகிறாள் தனம் (நந்திதா தாஸ்); இதனைக் கேள்விப்பட்டு மனம் ஒடிந்து போகிறான் சண்முகம்.

**“கறுப்பு – வெள்ளை எனப் பிரித்துக் கூறமுடியாத பகுதிகளும், இனம் புரியாத உணர்வுகளும், விடை தெரியாத கேள்விகளும் இருக்கத் தானே செய்கின்றன'' என்று கூறிக் கொண்டு, அதையே கலையென்றும் அழகென்றும் சிலாகித்துக் கொண்டு, அத்தகைய நிழலான பகுதிகளில் ஆணாதிக்கக் கோழைகளும், கொட்டை போட்ட காரியவாதிகளும் ஒளிந்து கொள்வதை நாம் அனுமதிக்கக் கூடாது.**

உதவி கேட்டு வரும் தனத்தின் கணவ னுக்கு சண்முகம் வேலை வாங்கித் தரு கிறான். தன் வீட்டில் பார்த்த பெண் வளர் மதியை (தேவயானி) வரதட்சிணை வாங்கித் திருமணமும் செய்து கொள்கிறான். தனத்தை மறந்து அவனு டைய வாழ்க்கை அதன் போக்கில் நகர் கிறது. திடீரென ஒருநாள் சென்னையின் சாலையோரத்தில் நடைபாதைவாசியாக, கட்டிடத் தொழிலாளியாக தனத்தைச் சந்திக்கிறான். கணவனை இழந்து தன்னந் தனியாய்த் தன் மகனுடன் தவிக்கும் தனத் திற்கு உதவத் துடிக்கிறது சண்முகத்தின் மனது.

காரணம் - முன்னாள் காதலி என்ற பாசமா, இன்னும் அவனது நெஞ்சில் எஞ்சியிருக்கும் காதலா, வாழ்ந்து கெட்ட அவளது ஏழ்மை தோற்றுவித்த இறக் கமா... எல்லாமுமா?

சண்முகம் அவளை நேரே தன் வீட்டுக்கு அழைத்துப் போயிருக்கலாம். ஏனோ தனது பணக்கார நண்பரின் வீட்டில் வேலைக்காரியாகச் சேர்த்து விடு கிறான்.

''எசமான் சாப்பிட்டு முடிப்பதற்கு முன்னால் வேலைக்காரி மகனுக்கு பிரி யாணி கேட்கிறதா'' என்று தனத்தை ஏசு கிறாள் மூத்த வேலைக்காரி.

பணக்கார நண்பரின் மகனோ தனத்தின் பையனுடைய கையிலிருந்து புத்தகத்தைப் பிடுங்கி ''உனக்கெல்லாம் எதுக்குடா புத்தகம்'' என்ற விரட்டு கிறான்.

''நாம் இந்த வீட்டை விட்டுப் போய்விடலாம்'' என்கிறான் தனத்தின் மகன். ''சண்முகம் சார் மனசு கஷ்டப் படும். அப்படியெல்லாம் பேசக் கூடாது'' என்று மகனைச் சமாதானம் செய்கிறாள் தனம். இதை மவுன சாட்சியாகப் பார்த்தி ருந்து கண் கலங்குகிறான் சண்முகம்.

''நண்பர் வீட்டில் தனத்தை கவுரவ மாக நடத்தவில்லை. எனவே அவளை நம் வீட்டுக்கு அழைத்து வந்துவிடலாம்'' என்று இப்போதாவது மனைவியிடம் சண்முகம் தன் விருப்பத்தை நேரடியாகத் தெரிவித்திருக்கலாம். ஆனால் கைக்குழந் தையைக் கவனிக்க முடியாத நிலைமை பற்றி மனைவி பேசுகின்ற சந்தர்ப்பம் பார்த்து ''தனத்தை வீட்டோடு வைத்துக் கொண்டால் நமக்கும் உபயோகமாக இருக்கும்; அவளுக்கும் உதவியாக இருக்கும்'' என்று கூறி மனைவியின் ஒப்புதலைப் பெறுகிறான்.

ஆனால் சண்முகத்தின் வீட்டிற்கு வரு வதற்குத் தயங்குகிறாள் தனம். ''எனக் காக இந்த உதவியைக்கூடச் செய்ய விருப்பமில்லைன்னா விடு'' என்று சின்னதாக ஒரு பிளாக்மெயில் செய்து அவளைச் சம்மதிக்க வைக்கிறான்.

சண்முகத்தின் வீட்டில் அவனது படுக் கையறையைச் சுத்தம் செய்ய நுழைந்து, கனவுக் காட்சியில் அவனுடன் ஒரு டூயட் பாடி முடிவில் சண்முகம் - வளர்மதி திரு மணப் புகைப்படத்தை கை தவறிப் போட்டுடைக்கிறாள் தனம். வேலைக் காரி தனத்தை மாமியார் மிக மோசமாக ஏசுகிறாள். சண்முகம் மறைவில் நின்று கண் கலங்குகிறான். சண்முகத்தின் பெயரை உச்சரித்ததற்காக இன்னொரு முறை எல்லோர் முன்னாலும் வசவு களைச் சுமக்கிறாள் தனம். இதையும் சகித்துக் கொள்கிறான் சண்முகம்.

''என்னால்தானே உனக்கு இந்தத் துன்பமெல்லாம்'' என்று மறைமுகமாக


படிப்பகம்

www.padippakam.com

அவளுக்கு ஆறுதல் கூறுகிறான். அவளோ சண்முகத்துக்காக எல்லா அவமானங்களையும் சுமக்கத் தயாராக இருக்கிறாள்.

இறுதியாக, சண்முகத்தின் இளம் பருவத்தோழன் கட்டையன் மூலம் ''சண்முகம் - தனம் காதல் விவகாரம்'' தற்செயலாகத் தெரிய வந்தவுடன் மனைவி வளர்மதி நிம்மதி இழக்கிறாள்.

அடுத்து நண்பர் வீட்டில் நடக்கும் விருந்தில் தனத்தை அவமானப்படுத்துகிறாள்; கந்துவட்டிக்காரன், சண்முகத்தின் வப்பாட்டி என்று தனத்தை ஏளனம் செய்ய, அதைத் தொடர்ந்து நடக்கும் சண்டையில் சண்முகம் அடிவாங்குவதை வெறுப்புடன் வேடிக்கை பார்க்கிறாள் வளர்மதி.

இத்தனைக்குப் பிறகும், சண்முகம் தன் மனைவியைக் கண்டிக்கவில்லை. 'தனம் தன்னுடைய இளம்பருவக் காதலி' என்பதை அவளிடம் கூறவுமில்லை. பொறுக்க முடியாமல் மனைவி வளர்மதி கேட்கும்போதுதான் அதை ஒப்புக் கொள்கிறான். ''எது நடக்கக்கூடாது என்று நினைத்தேனோ அது நடந்து விட்டது'' என வருந்துகிறான். ''யார்தான் இளம்பருவத்தில் காதலிக்கவில்லை'' என்று கேட்டு விட்டு நான் உனக்கு துரோகம் நினைத்ததில்லை என்றும் மனைவியிடம் கண் கலங்குகிறான்.

''எனக்கு உங்கள் மீதும் சந்தேகமில்லை; தனத்தின் மீதும் சந்தேகமில்லை. ஆனால் பயமாக இருக்கிறது. அவளைப் போகச்சொல்லி விடுகிறேன்'' என்கிறாள் வளர்மதி.

அதற்கு முன் அவளே போய் விடுகிறாள். ''வளர்மதியின் இடத்தில் நானிருந்தால் இதைத்தான் செய்திருப்பேன்'' என்று கடிதமும் எழுதி வைத்துவிட்டுப் போகிறாள் தனம்.

***

''அழகி படத்தில் குணசேகரன் நடித்திருக்கிறாராமே. என்ன கதாபாத்திரம்?'' என்று ஒரு நண்பரிடம் கேட்டபோது ''படத்தில வில்லங்கமே அவராலதான்'' என்று பதில் சொன்னார் அந்த நண்பர்.

அப்பாவியான கட்டையன் மட்டுமல்ல அடிமைச் சிந்தனையில் ஊறிப் போன வேலைக்காரியும், ஆதிக்கச் சிந்தனையில் ஊறிய மாமியாரும் ரசிகனின் பார்வையில் வெறுக்கத்தக்க வில்லிகளாகி விடுகிறார்கள். ஆனால் உண்மையான வில்லனான சண்முகமோ ரசிகனின் பார்வையில் பரிதாபத்துக்குரிய துன்பியல் நாயகனாகி விடுகிறான்.

**ரசிக சண்முகங்கள்!**

சண்முகம் கண்கலங்கிய காட்சிகளிலெல்லாம் அவனுடன் சேர்ந்து கண்கலங்கிய ரசிகர்கள் சண்முகத்தை வில்லன் என்று சொன்னால் தங்களையே வில்லன் என்று கூறுவதாகக் கருதி வெறுப்படையக் கூடும். அதற்கெல்லாம் பயந்து அடக்கி வாசிக்க முடியாது.



இது எம்.ஜி.ஆர். கதையோ, ரஜினி கதையோ அல்ல. இயக்குநரே சொல்வது போல ஒவ்வொருவர் வாழ்விலும் நடந்திருக்கக் கூடிய கதை. இத்தகையதொரு சூழலில் சண்முகம் செய்ததைத்தான் நீங்களும் செய்திருப்பீர்களென்றால் சண்முகத்தை நோக்கி வைக்கப்படும் கேள்விகளுக்கு நீங்களும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

**அற்பத்தனம் என்பது யாதெனில்...**

நடைபாதையோரத்தில் சண்முகம் தனத்தைச் சந்திக்கின்ற அந்தத் தருணம் வரை, ''உன் குற்றமா, என் குற்றமா, யாரை நானும் குற்றம் சொல்ல'' என்று பாடல் ஒலிக்கிறதே அந்தத் தருணம் வரை, சண்முகம் குற்றமற்றவன் என்றே ஒப்புக் கொள்வோம்.

ஒரு கூலிக்காரியாக, நடைபாதை வாசியாக, கணவனை இழந்த கைம்பெண்ணாக, தாயாக, அநாதையாக தனத்தைச் சந்தித்த சண்முகம் அவளை நண்பர் வீட்டில் வேலைக்காரியாக ஏன் சேர்த்து விட வேண்டும்?

நேரே தன் மனைவியிடம் வந்து அவளைப் பற்றிக் கூறி, பள்ளிப் பருவத்தில் தங்களுக்குள் இருந்த பருவம் வராக் காதலைப் பற்றியும் கூறி, தனத்தை வீட்டிற்கு அழைத்து வர மனைவியிடம் ஒப்புதல் கேட்டிருக்கலாமே. வளர்மதி அதற்கு ஒப்புக் கொண்டிருந்தால், ஒரு வேலைக்காரியாக இல்லாமல், சமமான தோழியாக தனம் அவர்களுடன் வாழ்ந்திருக்க முடியுமே!

வளர்மதி மறுத்திருக்கக் கூடும். அப்படியானால் அவளுடன் போராடியிருக்கலாம். இனிமையான அமைதியான மணவாழ்க்கையில் ஒரு சிறிய சலனம் ஏற்பட்டிருக்கும்; ஒருவேளை அத்தகைய போராட்டம் வளர்மதி என்ற அன்பு மனைவியின் அதுவரை தெரியாத அற்பத்தனங்களையும் சண்முகத்திற்கு அடையாளம் காட்டியிருக்கும்.

சண்முகத்தைப் போன்ற மனிதர்கள் தமது சொந்தத் தவறுகளும் அற்பத்தனங்களும் மற்றவர்களுக்கு வெளிப்பட்டு விடுமே என்று மட்டும் அஞ்சுவதில்லை. மனைவி முதலான தமது சொந்தங்களின் அற்பத்தனங்கள் அவர்கள் வாயாலேயே அதிகாரபூர்வமாகத் தங்கள் முகத்தின் மீது உமிழப்படுவதை எண்ணியும் நடுங்குகிறார்கள். உறவுகள் உண்மைத் தீயில் புடம் போடப்படுவதைக் காட்டிலும், பொய்யின் நிச்சயமற்ற கதகதப்பில் பேணப்படுவதையே அற்பத்தனம் பாதுகாப்பானதாகக் கருதுகிறது.

**பயங்கள் பலவிதம்!**

இறுதிக் காட்சியில் மனைவி குறுக்கு விசாரணை செய்யும் போது உண்மையை ஒப்புக் கொள்ளும் 'நல்லவனான' சண்முகம் முதலிலேயே அவளிடம் இதைச் சொல்லாததற்குக் காரணம் பயம். தனத்திற்கு அடைக்கலம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தைக் காட்டிலும், தன்னுடைய நடத்தையின்



படிப்பகம்

www.padippakam.com

மீது மனைவிக்குச் சந்தேகம் வந்து விடுமோ என்ற பயம்!

மனைவிக்கு வேறுவிதமான பயம். ''உங்கள் மீதும் தனத்தின் மீதும் எனக்குச் சந்தேகமில்லை. இருந்தாலும் பயமாயிருக்கிறது'' என்கிறார் வளர்மதி. ''இதுவரை நீங்கள் வரம்பு மீறவில்லையென்பதை வேண்டுமானால் நம்புகிறேன். ஆனால் இனியும் மீற மாட்டீர்கள் என்று நம்ப முடியவில்லை'' என்பதுதான் வளர்மதி கூறும் பயத்தின் பொருள்.

பழசையெல்லாம் மறந்து விடுமாறு சண்முகத்திற்குப் புத்திமதி சொல்லும் தனமும், அறிவுரை சொல்லி முடித்தபின் 'எனக்குப் பயமாயிருக்கிறது'' என்கிறாள்.

''இதுவரை நாம் வரம்பு மீறவில்லை என்பது உண்மை. ஆனால் மீற மாட்டோம் என்பதற்கு உத்திரவாதமில்லை'' என்பதுதான் தனம் வெளிப்படுத்தும் பயம். இரண்டு பெண் பாத்திரங்களும் உண்மையைப் பேசி விடுகின்றனர்.

ஆனால் சண்முகம் நடிக்கிறான். தனத்தின் நினைவாக அவளது செருப்பை ஒளித்து வைத்திருக்கும் சண்முகம், தனம் யாரென்பதை கவனமாகத் தன் மனைவியிடம் மறைத்த சண்முகம் தனது தடுமாற்றத்தை யாரிடமும் மனம் திறந்து கூறுவதில்லை.

ஆனால் சண்முகமும் பயப்படுகிறான். தனது பலவீனம் வெளிப்பட்டு விடக்கூடாதே என்பதுதான் அவனது பயம்.

**ஆணாதிக்கத்தின் பரந்த உள்ளம்!**

இறுதிக் காட்சியில், ''எது நடக்கக் கூடாது என்று நினைத்தேனோ அது நடந்து விட்டது'' என்று தன் மனைவியிடம் சொல்கிறான் சண்முகம். தன் நடத்தை மீது சந்தேகம் வந்து விடக் கூடாது என்று கருதும் ஒரு நபர் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளைத் தவிர்த்து, உண்மையிலேயே வெளிப்படையாக நடந்து கொண்டிருக்க வேண்டும்.

ஒரு மனிதன் என்ன செய்ய விரும்புகிறான் என்பதிலிருந்து உலகம் அவனை மதிப்பிடுவதில்லை. என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதிலிருந்துதான் அவனை மதிப்பிடுகிறது; அவனது விருப்பத்தையும் ஊகிக்கிறது.

தனத்திற்கு உதவி செய்வதில் மனிதாபிமானம் தவிர 'வேறு' எந்த நோக்கமும் சண்முகத்திற்குக் கிடையாது என்பதை நம்புவதாக இருந்தால், ''துவக்கத்திலேயே வளர்மதியிடம் அவன் ஏன் உண்மையைச் சொல்லவில்லை?'' என்ற கேள்வி எழுகிறது.

ஆண் வர்க்கத்தின் சார்பாக இதற்கு அளிக்கப்படும் விடை இதுதான்! ''குறுகிய சிந்தனை கொண்ட பெண்கள் ஆண்களின் பரந்த உள்ளத்தைச் சரியான கோணத்தில் புரிந்து கொள்வதில்லை. எனவே இந்த மாதிரி விசயங்களையெல்லாம் அவர்களிடம் உடைத்துச் சொல்லிவிட முடியாது.''

ஒருவேளை வளர்மதிக்கு ஒரு முன்னாள் காதலன் இருந்து, அவனை அழைத்துவந்து இன்னாரென்று சொல்லாமல் வீட்டிலே தங்க வைத்தால்?

''இயற்கையிலேயே ஆணாதிக்க சுபாவம் கொண்ட ஆண்கள் பெண்களின் இரக்க மனத்தைச் சரியான கோணத்தில் புரிந்து கொள்வதில்லை. அதனால்தான் 'இவன் என் முன்னாள் காதலன்' என்ற உண்மையை நான் கணவனிடம் சொல்லவில்லை'' என்று வளர்மதி அதற்கு விளக்கம் சொன்னால்...

**''சண்முகம் ஏன் ஒரு சராசரி மனிதனாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறான்'' என்பதல்ல நம் கேள்வி. இந்தச் சராசரி மனிதனின் அற்பத்தனங்கள் இடித்துரைக்கப்படாமல் அனுதாபத்துடன் சித்தரிக்கப் படுவது ஏன் என்பதுதான் கேள்வி.**

வளர்மதியின் முன்னாள் காதலன் 'அழகன்' என்று ஏற்றுக் கொள்ளப்படுவானா? படம் நூறு நாள் ஓடுமா? சண்முகத்துக்காகக் கண் கலங்கிய ரசிக சண்முகங்கள் பதில் சொல்லவேண்டும்.

**அபாயகரமான அவலம்!**

பல படங்களில் நாம் காண்பதைப் போல இறுதிக் காட்சியை கீழ்க்கண்டவாறு அமைத்திருந்தால் என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்கள்.

''தனம் இந்த வீட்டில்தான் இருப்பாள். உனக்குச் சம்மதமில்லையென்றால் நீ வெளியே போடீ'' என்று சண்முகம் பொங்கி எழுகிறான் என்று வைத்துக் கொள்வோம். என்ன ஆகும்? படம் முழுவதும் ரசிகர்களின் கண்களிலிருந்து தோண்டித் தோண்டியெடுக்கப்பட்ட கண்ணீர் அந்தக் கணமே வறண்டு போகும்.

சண்முகத்தின் பணிவும் கையறு நிலையும், தவிப்பும்தான் அவனை ஒரு துன்பியல் நாயகனாக்குகிறது. வளர்மதியோ, கணவனின் வெள்ளை உள்ளத்தைப் புரிந்து கொள்ளத் தவறிய வறட்டுப் பிடிவாதக்காரியாக, புத்தி கெட்டுப் போய்க் காரியத்தைக் கெடுத்த ஆத்திரக்காரியாகக் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறாள்.

எப்போதுமே ஆதிக்க வர்க்கம் அகம்பாவத்தோடு நடந்து கொள்ளும் நேரங்களில் அது வெறுக்கத்தக்கதாக இருக்கிறது. ஆனால் அது தன்னை அவல நிலையில் இருத்திக் கொள்ளும்போது மிகவும் அபாயகரமானதாகி விடுகிறது. ஆதிக்க வர்க்கத்தின் அவலத்திற்கு அடக்கப்பட்ட வர்க்கமே கண்ணீர் வடிக்கும் கேலிக்கூத்து இங்கேதான் தொடங்குகிறது.

''ஐயோ... யாருமே இல்லையா'' என்ற அவலக்குரலுடன் திரைக்குள் வருகிறாள் தனம். அந்தக் கணமே அவளது அவலம் முடிந்து சண்முகத்தின் அவலம் தொடங்குகிறது. ''என்னல்லாம் மறந்துட்டீல்ல'', ''எனக்காக இந்த உதவியக்கூட செய்ய முடியலன்னா விடு'', ''உன்னுடைய செருப்பை வச்சிக்கக் கூட எனக்கு உரிமை இல்லையா?'' - என்று சரம் சரமாக சென்டிமெண்ட் அம்புகளை வீசுகிறான் சண்முகம்.

இரக்க உணர்ச்சியால் உந்தப்பட்டு சண்முகத்திற்காக எதையும் இழக்கச் சித்தமாகிறாள் தனம். அடிமைத்தனம் பரவச நிலையை எய்துகிறது.

**அடிமைத்தனத்தின் பரவசம்
ஆதிக்க உணர்வின் வருத்தம்!**

சண்முகத்தால் அருளப்பட்ட இந்த வாழ்க்கையில் தனம் அடைந்த ஆதாயங்கள் என்ன? தனத்தின் கூற்றுப்படி ''ரோட்ல கிடந்தவளுக்கு இது பெரிய வாழ்க்கை''. மேட்டுக்குடி வர்க்கத்தின் பயன்படுத்திய மிச்சங்களும், அதிலிருந்து முளைத்த நடுத்தர வர்க்கமாகி விடும் கனவும் 'ஆதாயங்கள்' என்றால், சண்முகத்தைச் சந்தித்ததால் தோன்றிய மனப்போராட்டமும், ஒரு வேலைக்காரி என்ற முறையில் அவள் பட்ட அவமானங்களும், சண்முகத்துக்காக அவற்றைச் சகித்துக் கொள்ள நேர்ந்த கொடுமையும் அவளது இழப்புகள்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு வேலைக்காரி என்ற முறையில் அவள் இழிவுபடுத்தப்படும் போதெல்லாம் அதை எதிர்க்க முடியாத கையறு நிலையை சண்முகம் வெளிப்படுத்துகிறான். பழைய பிளாஸ்டிக் செருப்புக்காக தனத்திடம் அவன் நடத்தும் போராட்டத்தைக்கூட, அவளுடைய சுய மரியாதைக்காக மற்றவர்களிடம் அவனால் நடத்த முடியவில்லை. தனம் யார் என்பதை மறைத்ததன் காரணமாக மட்டும் தான் அவள் மவுனம் சாதிக்க நேர்ந்தது என்ற கருத இடமில்லை. ''ஸ்கூட்டரை விற்று நண்பனுக்கு உதவி செய்தேன்'' என்ற சாதாரண விசயத்தைக் கூட வெளிப்படையாக மனைவியிடம் சொல்ல முடியாத கோழை சண்முகம். பணக்கார வீட்டில் பெண்ணெடுத்து, வரதட்சிணையாக வீட்டை வாங்கிக் கொண்டு, தன்மானத்தை அடகு வைக்கச் சம்மதிக்கும் ஒரு மனிதன் அடுத்தவரின் மானத்துக்கு எப்படிப் போராட முடியும்?

போராட முடியாது; வருத்தப்பட முடியும். தனத்திற்கு நேரும் அவமானங்களுக்காக சண்முகம் வருந்தத்தான் செய்கிறான். ஆனால் தான் போராடத் தவறியதற்காக அவன் வருந்தவில்லை.

**சூழ்நிலையின் கைதிகள்!**

துவக்கத்தில் திருமணம் செய்ய முடியாமல் தனத்தை இழக்க நேர்ந்தது முதல், இறுதியில் வேலைக்காரியாகக் கூட இருக்க முடியாமல் அவள் வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது வரை அனைத்துமே ''யாரையும் குற்றம் சொல்ல முடியாத'' விதியின் விளையாட்டாகவே அவனுக்குத் தோன்றுகிறது.

சூழ்நிலையின் கைதிகளாகத் தங்களைக் கருதிக் கொள்பவர்கள், - அவர்கள் எவ்வளவு தாராளமனம் கொண்டவர்களாக இருந்த போதிலும் - சுய விமரிசனம் செய்து கொள்வதில்லை.

''ஒரு நல்ல மனம் கொண்ட நடுத்தர வர்க்க ஆணாதிக்கவாதி'' என்ற முறையில் சண்முகம் இயல்பாகத்தான் சிந்திக்கிறான். தனது மனைவி, குடும்பம், தகுதி ஆகியவற்றுக்குச் சேதம் ஏற்படாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு அவன் தனத்துக்கு உதவ விரும்புகிறான்.

இப்படியொரு நிபந்தனை வைத்துக் கொள்வது குறித்து அவன் வெட்கமோ குற்றவுணர்வோ அடையவில்லை. அது இயற்கையானதாகவும் நியாயமானதாகவுமே அவனுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

நடுத்தரவர்க்கம் ஏழைக்கு உதவும் போது அது, ஏழையின் தேவைகளையும் விருப்பங்களையும் கேட்டறிவதில்லை. தனது பெருந்தன்மை குறித்த மயக்க ரீதியிலும், ஆன்ம திருப்தியிலும் திளைக்கிறது. இவையெதையும் பரிசீலிப்பதையோ கேள்விக்குள்ளாக்குவதையோ அது விரும்புவதில்லை.

நாம் பரிசீலிப்போம். ஒருவேளை தனம் இன்னாரென்று வளர்மதிக்குத் தெரிய வராமல் போயிருந்தால்? தொடர்ந்து சண்முகத்தின் வீட்டில் அவள் வேலைக்காரியாகவே நீடித்திருப்பாளா? சண்முகம் தன் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருக்க, தனம் தனது கடந்தகாலக் காதல் குறித்த நினைவுகளுடன் காலம் தள்ள வேண்டுமா? ''சிந்தனை வடிவத்திலான இந்தச் சின்னவீடு'' சண்முகம் தனக்குத்தானே செய்து கொள்ளும் உதவியா, தனத்திற்குச் செய்யும் உதவியா? ஒரு வேளை அந்த இளம் விதவைக்கு வேறொருவனை மறுமணம் செய்து வைப்பது கடந்தகாலக் காதலுக்குச் செய்யும் துரோகமாகி விடுமா?

**நடுத்தரவர்க்கம் ஏழைக்கு உதவும் போது அது, ஏழையின் தேவைகளையும் விருப்பங்களையும் கேட்டறிவதில்லை. தனது பெருந்தன்மை குறித்த மயக்க ரீதியிலும், ஆன்ம திருப்தியிலும் திளைக்கிறது. இவை எதையும் பரிசீலிப்பதையோ கேள்விக்குள்ளாக்குவதையோ அது விரும்புவதில்லை.**

சண்முகத்தின் வீட்டிற்குள் தனம் நுழையும் அந்தக் கணத்திலிருந்து 'அழகி' ஒரு திகில் படமாகி விடுகிறது. பலவீனமானதொரு தருணத்தில் சண்முகமும் தனமும் பாலியல் ஒழுக்க நெறியை மீறி விடுவார்களோ என்ற அச்சம் திரைக்கதையால் தொடர்ந்து பராமரிக்கப்படுகிறது. ஒழுக்கம் ''மீறப்பட்டது கனவில்தான்'' என்ற விசயம் தெளிவானவுடன் தங்களது நல்லொழுக்கம் உறுதி செய்யப்பட்ட திருப்தியில் ரசிக சண்முகங்கள் கண்ணைத் துடைத்துக் கொள்கிறார்கள்.

தர்க்க ரீதியான கேள்விகளால் அழகியல் உணர்வுகளை அறுத்துப் பார்வைக்கு வைப்பது, கலா ரசிகர்களுக்கும் கவிதை மனம் கொண்டோருக்கும் வெறுப்பைத் தரலாம். ஆனால், இவையனைத்தும் எதார்த்த வாழ்வில் ஒரு சாதாரண மனிதன் எழுப்பக்கூடிய கேள்விகள்தான்.

''கறுப்பு - வெள்ளை எனப் பிரித்துக் கூறமுடியாத பகுதிகளும், இனம் புரியாத உணர்வுகளும், விடை தெரியாத கேள்விகளும் இருக்கத்தானே செய்கின்றன'' என்று கூறிக் கொண்டு, அதையே கலையென்றும் அழகென்றும் சிலாகித்துக் கொண்டு, அத்தகைய நிழலான பகுதிகளில் ஆணாதிக்கக் கோழைகளும், கொட்டை போட்ட காரியவாதிகளும் ஒளிந்து கொள்வதை நாம் அனுமதிக்கக் கூடாது.

**அற்ப மனிதனுக்கு அனுதாபம் ஏன்?**

''சண்முகம் ஒன்றும் புரட்சிக்காரனல்ல; உங்களையும் என்னையும் போன்று குறைகளும் பலவீனங்களும் கொண்ட ஒரு நல்ல மனிதன் - அவ்வளவுதான்'' என்று ரசிக சண்முகங்கள் வாதிடலாம்.

''சண்முகம் ஏன் ஒரு சராசரி மனிதனாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறான்'' என்பதல்ல நம் கேள்வி. இந்தச் சராசரி மனிதனின் அற்பத்தனங்கள் இடித்துரைக்கப்படாமல் அனுதாபத்துடன் சித்தரிக்கப்படுவது ஏன் என்பதுதான் கேள்வி.

ஒரு கதாபாத்திரத்தின் வாழ்வும் படைப்பாளியின் வாழ்வும் பிரிக்க முடியாதவை. சண்முகம் முழுமையாகவே ஒரு கற்பனைப் பாத்திரமாக இருந்தாலும் அந்தப் பாத்திரத்தைச் செதுக்கி உருவாக்கும் போக்கில் அதன் படைப்பாளி (தங்கர் பச்சான்) ஏறத்தாழ அந்தப் பாத்திரமாகவே வாழ்ந்து பார்த்து விடுகிறார். அதே நேரத்தில் தனது சொந்தக் கண்ணோட்டத்தில் அந்தப் பாத்திரத்தை மதிப்பிடவும் செய்கிறார்.

செய்ய வேண்டியதைச் செய்யத் தவறிய குற்றவாளியாக, செய்யக் கூடியதைச் செய்ய முயலாத கோழையாகச் சண்முகத்தை அவரால் மதிப்பிட முடியவில்லை. சண்முகத்தின் உருவில் அவர் தன்னையே காண்கிறார். சோகம் பூசப்பட்ட குரலில் தன் கதையை வர்ணிக்கும் சண்முகத்தின் குரல் ''நான் விதிக்காற்றில் சிக்கிய சருகு'' என்கிறது; கண்ணீர் ததும்பும் அவனது முகமோ ''எனது துயரம் ஒரு விடை தெரியாத புதிர்'' என்கிறது.

சினிமாத்திரை எனும் பிரம்மாண்டமான கண்ணாடியில் தங்களுடைய பிம்பம் கண் கலங்குவதைக் கண்ட ரசிக சண்முகங்கள் உடனே தங்களது கண்ணிலும் நீரை வரவழைத்துக் கொண்டு கலைக்கு ஏற்ப எதார்த்தத்தைச் சரி செய்து



படிப்பகம்

www.padippakam.com

கொள்கிறார்கள். இனி, நடுத்தர வர்க்கத்தின் அற்பமனிதர்கள் அனைவரும் தங்களைத் துன்பியல் நாயகர்களாகக் கருதிக் கொள்ளலாம்.

ஆனாலும் இதில் ஒரு பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. திரையரங்கில் தன் நிழலைப் பார்த்துக் கண்கலங்குவது எளிது; நிஜ வாழ்க்கையில் ''நான் செய்யத் தவறியது இதுதான்'' என்று தெளிவாகத் தெரியும்போது கையறு நிலையைக் கற்பித்துக் கொண்டு கண் கலங்குவது கடினம். ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த முரண்பாடுகளைப் பற்றி மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அறிந்திருக்கிறான் என்பதால், இந்த அறிவே அவன் ஆட்பட விரும்பும் போலியான உணர்ச்சிகளை அவ்வப்போது உறிஞ்சிக் காய வைத்து விடுகிறது.

**கையறுநிலையின் சொர்க்கம்!**

தனது சொந்த அறிவு குத்திக் காட்டும் உண்மையிலிருந்தும் குற்றவுணர்விலிருந்தும் தப்பித்து போலி உணர்ச்சிகளில் அடைக்கலம் புகுவதற்கும், அதன் மூலம் தனக்குத்தானே ஆறுதல் பெறவும் அவன் முயற்சிக்கிறான். அறிவு என்பது ஒரு சாபக்கேடாகவும் அறியாமையே மாபெரும் வரப்பிரசாதமாகவும் தோன்றும் மனநிலை இது.

தனது சமூக மதிப்பீடுகளுக்கும் தனது சொந்த நடைமுறைக்கும் இடையே நியாயப்படுத்த முடியாத பிணக்கு ஏற்பட்டு விட்டதை தனது சொந்த அறிவே சுட்டிக் காட்டும்போது அறியாமையை வழிபடுகிறார்கள் இத்தகைய மனிதர்கள். இவர்கள் அறிவாளிகளாக இருக்கும் பட்சத்தில் அறியொணா வாதம் இவர்களின் ஆயுதமாகி விடுகிறது.

அறிவு முதிர்ச்சியுறாத இளம்பருவத்தின் மகிழ்ச்சி, உளவியல் முரண்பாடுகள் தோன்றாத 'சுதந்திரமான' பழைய பொற்காலம், அதன் இனிமை, குதூகலம், கள்ளம் கபடமற்ற தன்மை, தாய் மடி... இதோ, மூளைக்குள்ளேயே கிளிசரின் தயாராகிவிட்டது!

குற்றவுணர்வின் நரகத்திலிருந்து தப்பித்து, கையறு நிலையின் சொர்க்கத்திற்குள் நுழைகிறான் சண்முகம். திரையரங்கின் முதல் வகுப்பில் அமர்ந்திருக்கும் ரசிக சண்முகங்களும் தேவதைக் கதையின் கனவிற்குள் நுழையும் பிள்ளைகள் போலத் தம் இளமைக் காலத்திற்குள் நுழைகிறார்கள்.

திரையரங்குக்கு வெளியில் நிறுத்தியிருக்கும் புத்தம்புதிய மோட்டார் சைக்கிளையும், செரிமானமாகாமல் நெஞ்சில் வந்து இனிக்கும் சரவண பவன் சிற்றுண்டியையும் மறந்து, ''இதுதான்... இதுதான்... நாங்கள் இழந்த சொர்க்கமும் இதுவேதான்'' என்று மல்லாக் கொட்டையையும் மரத்தடிப் பள்ளியையும் கண்டு கண் கலங்குகிறார்கள்.

முன்வரிசையில் அமர்ந்திருக்கும் பஞ்சம் பிழைக்க வந்த மக்களோ தங்கள் கிராமத்தை உள்ளபடியே பார்த்த மகிழ்ச்சியில் குதூகலிக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் கட்டையனும் இருக்கக் கூடும்.

**'அழகி'யலின் அரசியல்**

''இந்த நாள் அன்று போல் இன்பமாய் இல்லையே, அது ஏன், ஏன்... நண்பனே'' என்ற கேள்வியை சிவாஜி கணேசன் 30 ஆண்டுகள் முன்னமே கேட்டுவிட்டார். 30 ஆண்டுகளுக்குப் பிறகு சண்முகமாவது அதற்கு விடை சொல்வான் என்று எதிர்பார்த்தால், அந்தநாள் ஞாபகத்தை இன்னும் கொஞ்சம் ஆழ உழுதிருக்கிறான் அவ்வளவுதான்.

**சினிமாத்திரை எனும் பிரம்மாண்டமான கண்ணாடியில் தங்களுடைய பிம்பம் கண் கலங்குவதைக் கண்ட ரசிக சண்முகங்கள் உடனே தங்களது கண்ணிலும் நீரை வரவழைத்துக் கொண்டு கலைக்கு ஏற்ப எதார்த்தத்தைச் சரி செய்து கொள்கிறார்கள். இனி, நடுத்தர வர்க்கத்தின் அற்பமனிதர்கள் அனைவரும் தங்களைத் துன்பியல் நாயகர்களாகக் கருதிக் கொள்ளலாம்.**

''ஆழ உழுவதுதான் அழகியல்'' என்பார்கள் கலா ரசிகர்கள். நாம் இந்த 'அழகி'யலின் அரசியலை லேசாகக் கிளறி மட்டும் பார்ப்போம். படத்தின் முதல் காட்சியிலேயே நமக்கு வேடிக்கையானதொரு 'தடயம்' கிடைக்கிறது.

தனத்தின் பிள்ளையை வளர்க்கும் சண்முகம், அவனது பள்ளி ஆவணத்தில் 'காப்பாளர்' என்று குறிக்கப்பட்ட இடத்தில் கையொப்பமிடுகிறான். ஆண்கள் 'இயற்கையிலேயே' பெண்களின் காப்பாளராகி விடுகிறார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த நடுத்தர வர்க்கமும், மேட்டுக்குடியினரும் கூட தத்தம் சமூகத்து ஏழை எளியவர்களின் காப்பாளர்களாகத்தான் தம்மைக் கருதிக் கொள்கிறார்கள். கருணாநிதியும் முசுலீம் மக்களின் காப்பாளராக இன்னமும் தன்னைக் கருதிக் கொள்கிறார்.

குஜராத்தில் பாரதீய ஜனதா நடத்தி வருவதைப் போன்றதொரு படுகொலையை அவர் தனிப்பட்ட முறையில் விரும்ப மாட்டார் என்பதை இந்தத் தருணத்திலும் உறுதியாகச் சொல்லலாம். எனினும் பாரதீய ஜனதாவை அவரால் தட்டிக் கேட்க முடியவில்லை.

தனது மாமியாரைத் தட்டிக் கேட்க முடியாத சண்முகத்தின் நிலையைப் போன்றதொரு 'அரசியல் அவல நிலை' இது. தனது கட்சியின் நலனுக்கு ஊறு நேராது என்ற உத்திரவாதம் மட்டும் இருந்தால் அவர் முசுலீம்களுக்கு ஏதேனும் செய்யவே விழைகிறார். திருவாரூரின் வீதிகளில் கருப்புக் கொடியேந்தி நடந்து சென்ற கள்ளங்கபடமற்ற நேர்மையான மாணவப் பருவம் அவரது நினைவில் நிழலாடக் கூடும். அவரும் கண்கலங்கக் கூடும்!

**குஜராத்தின் சண்முகங்கள்!**

குஜராத் முசுலீம் அகதிகளில் சிலர் தற்போது தம் வீடுகளுக்குத் திரும்பிய போது அண்டை வீட்டுக்கார இந்துக்கள் அவர்களைப் பார்த்துக் கண் கலங்கி அழுதார்களாம்.

''எதற்காக அழுதீர்கள்? எங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை எண்ணி அழுதீர்களா, அதனைத் தடுக்க முடியாத கோழைகளாக நீங்கள் ஒளிந்து கொண்டதை எண்ணி அழுதீர்களா, நாம் கூடி வாழ்ந்த காலத்தை எண்ணி அழுதீர்களா?'' என்று முசுலீம்கள் அவர்களைக் கேட்க முடியுமா என்ன?

கண்ணீரையும், கலையையும் தர்க்க ரீதியான கேள்விகளால் அறுப்பதை அழகியல் ஆராதனைக் காரர்கள் அனுமதிப்பதில்லையே! ''அழகியது - நல்லது - ஒழுக்க ரீதியில் சரியானது'' ஆகிய இவற்றுக்கிடையில் பிரிக்க முடியாதவொரு இயங்கியல் உறவு உள்ளது என்பதை அவர்கள் ஏற்பதில்லை.

கோழைத்தனத்திலும் சுயநலத்திலும் கலையழகைக் காண முடியுமென்றால், ஒரு அற்பவாதி துன்பியல் நாயகனாக முடியுமென்றால், அவனுடைய கண்ணீரும் நம் கண்களைக் குளமாக்குமென்றால், குஜராத் படுகொலை பற்றித் தீட்டப்படும் சித்திரத்தின் துன்பியல் நாயகர்கள் - வேறு யார்....? கண் கலங்கி நின்ற அந்த அண்டை வீட்டுக்கார இந்துக்கள் தான்!

● மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

சட்டத்தால் தேடப்படும் கிரிமினல் குற்றவாளிகளில் இரண்டுவகை உண்டு. சந்தர்ப்ப சூழ்நிலையால், விளைவுகளைச் சிந்திக்க இயலாத தருணங்களில், வெறும் உணர்ச்சிகளின் உந்துதலால் குற்றம் புரிந்துவிட்டு, முழு நினைவு திரும்பிய பிறகு சட்டத்திற்குப் பயந்து ஒளிந்து வாழ்பவர்கள் ஒருவகை.

கிரிமினல் குற்றங்கள் புரிவதையே தொழிலாகக் கொண்டு, அவற்றையே வாழ்வின் ஆதாரமாகவும் கொண்டு, மதிநுட்பத்தோடும், கலை - நேர்த்தி நயத்தோடும் திட்டமிட்டு தக்க தருணங்கள் பார்த்து குற்றம் புரிந்து விட்டு சட்டமும் தண்டனையும் தன்னை நெருங்க முடியாது என்கிற திமிரோடு பகிரங்கமாகவும் வாழ்பவர்கள் மற்றொரு வகை.

இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள்தாம் வாஜ்பாய் - அத்வானி வகையறாக்கள்.

1949, அயோத்தி பாபரி மசூதிக்குள் நள்ளிரவில் புகுந்து ராமன் சிலையைத் திருட்டுத்தனமாக வைத்த நாளில் இருந்து இன்று வரை அவர்கள் செய்துவரும் கிரிமினல் குற்றங்களும் சட்டத்தைத் துச்சமென மதித்து அவர்கள் புரியும் பித்தலாட்டங்களும் ஏராளம்.

அந்த பாபரி மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்று எவ்வித ஆதாரமுமின்றிச் சாதித்து வருவதும், அதை நிரூபிக்க முடியாது போகும் போதும் அதுதான் கோடிக்கணக்கான இந்துக்களின் நம்பிக்கை என்று புரட்டிப் பேசுவதும், அங்கே பாபரி மசூதி கட்டப்படும் முன்பு ராமன்கோவில் இருந்ததாகவும், அதை இடித்துத் தகர்த்துவிட்டுத்தான் பாபரி மசூதி கட்டப்பட்டதாகவும் வேறு கோவில்களில் இருந்து கல்தூண்களைக் கொண்டுவந்து அகழ்வாய்வுக் குழிக்குள் போட்டு விட்டு ஆதாரங்களாகக் காட்டுவதும், பாபரி மசூதிக்கு பாதிப்பு ஏதுமின்றி செங்கல் பூசைகள், யாக வேள்விகள் மட்டுமே நடத்தப் போவதாக உச்ச நீதிமன்றத்திடம் வாக்குறுதி கொடுத்துவிட்டு ஆயிரக்கணக்கில் கடப்பாறைச் சேவகர்களைத் திரட்டி இடித்துத் தள்ளுவதும் என்று இந்து மத வெறியர்களின் குற்றங்களையும் பித்தலாட்டங்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.



இந்த வரிசையில் காஞ்சி சங்கராச்சாரியை முன்னிறுத்தி சமரசத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நாடகமாடியபோது நடந்த இன்னொரு பித்தலாட்டமும் சேர்ந்து கொண்டது.

கடந்த மார்ச் 15-ந் தேதி ராமன் கோவில் கட்டும் வேலையை நிச்சயம் துவங்கப் போவதாகக் கூறிவந்த இந்து மதவெறித் தலைவர்கள் ''இது மதவிவகாரம், ஆகவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்படமாட்டோம்'' என்று அடாவடியாகப் பேசினர். இந்தச் சவடாலே கூட பின்னர் ''உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாகப்'' புளுகி, ஏதோ விட்டுக் கொடுப்பதைப் போல நாடகமாடி ஏதாவது சலுகையைப் பெறும் நோக்கத்துடனான பித்தலாட்டம்தான்.

இந்த நிலையில் இந்துமதவெறித் தலைவர்கள், காஞ்சிப் பீடாதிபதியை டெல்லிக்கு அழைத்து வந்தனர். அவர், ''பாபரி மசூதி இடிக்கப்பட்ட பிரச்சினைக்குரிய இடம் தவிர அதை அடுத்துள்ள பகுதி அரசு கையகப்படுத்தியுள்ள இந்துக்களுக்குச் சொந்தமான பகுதி. இந்துக்களுக்குச் சொந்தமான இப்பகுதியில் ராமன்கோவில் கட்டும் பணி தொடங்குவதற்கு அனுமதித்தால், பாபரி மசூதி இருந்த பிரச்சினைக்குரிய இடம் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வரும் போது, விசுவ இந்து பரிசத்தின் ராம ஜென்மபூமி அறக் கட்டளை அத்தீர்ப்பை மதித்து ஏற்பதாக உறுதி கூறும்'' என்ற திட்டத்தை முன்வைத்தார்.

# அயோத்தி:
# அடிக்கல் மோசடி அடிமனையும் மோசடி!

உண்மையில் இந்து மதவெறி அமைப்புகளின் திட்டமும் - நோக்கமும் இதுதான் என்பதைப் புரிந்து கொண்ட இசுலாமிய மதத்தலைவர்கள் இதை நிராகரித்து விட்டனர். ஆனாலும், பா.ஜ.க. தலைவர் ஜனா. கிருஷ்ணமூர்த்தி தொடர்ந்து புளுகுவதை நிறுத்தவில்லை.'' பாபரி மசூதி கட்டப்பட்டிருந்த 80 அடிக்கு 40 அடி நிலப்பரப்பு மட்டும்தான் உண்மையில் பிரச்சினைக்குரியது. எஞ்சிய பகுதி பிரச்சினைக்குரியதில்லை. விசுவ இந்து பரிசத்தும் ராம ஜென்ம பூமி அறக்கட்டளையும் விலைக்கு வாங்கிய நிலம். எனவே, அதைத் திருப்பித் தரும்படி அந்த அமைப்புகள் கேட்பதற்கு அடிப்படை இருக்கிறது'' என்றார். இதுவும் ஒரு புளுகுதான் என்பதைப் பிரதமரின் புளுகு காட்டுகிறது.

''பிரச்சினைக்குரிய இடத்தை அடுத்து, அரசு கையகப்படுத்தியுள்ள 67 ஏக்கர்களில் 42 ஏக்கர் நிலத்துக்கு ராம ஜென்ம பூமி அறக்கட்டளை நிரந்தரக் குத்தகையாளர். பிரச்சினைக்கிடமில்லாத இந்த நிலத்தோடு மேலும் ஒரு ஏக்கர் நிலத்தையும் அது பெற்றுள்ளது'' என்று நாடாளுமன்றத்தில் வாஜ்பாய் அறிவித்தார்.

பா.ஜ.க. தலைவர், பிரதமர் கூற்றுக்களை ஒப்பிட்டுப் பார்த்தாலே முரண்பாடு புரியும். பாபரி மசூதி இருந்த 0.77 ஏக்கர் நிலம் தவிர பிற பகுதி அதாவது 67 ஏக்கர் ராமஜென்ம பூமி - விசுவ இந்து பரிசத்து விலைக்கு வாங்கியதாகக் கூறுவது பொய். அந்த 67 ஏக்கரிலும் 42 ஏக்கருக்கு விசுவ இந்து பரிசத் - ராம ஜென்ம பூமி அறக்கட்டளை குத்தகையாளர்தான் என்பது தெரிகிறது. ஒரு ஏக்கர் நிலம்தான் இந்த அமைப்புகள் விலைக்கு வாங்கியவை என்கிறார் வாஜ்பாய். அப்படியானால் இந்த 43 ஏக்கர் போக எஞ்சிய 24 ஏக்கர் நிலம் யாருக்குச் சொந்தம்? 42 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு விட்ட நில உடமையாளர் யார் என்கிற உண்மை பற்றி இந்து மதவெறியர்கள் மூச்சு விடுவதில்லை. பாபரி மசூதி பகுதி தவிர சுற்றியுள்ள 67 ஏக்கரும் தமக்குத்தான் சொந்தமானது; மத்திய அரசு கையகப்படுத்தியுள்ள இந்த நிலத்தைக் கோரிப் பெறத் தமக்கு உரிமையுள்ளது என்று இந்து மத வெறியர்கள் சாதித்து வருகின்றனர்.

ஆனால், ஆதாரபூர்வ உண்மை இதுதான். பாபரி மசூதி - ராமன் கோவில் பிரச்சினையை இந்து மதவெறி அமைப்புகள் தீவிரப்படுத்தி, ரத யாத்திரைகளும்



படிப்பகம்

www.padippakam.com

மதவெறிப் படுகொலைகளும் நடத்தி அயோத்தியில் பூசைகள் - யாகங்கள் நடத்துவதையும், கரசேவகர்களைக் குவிப்பதையும் தீவிரப்படுத்தியபோது உ.பி.யில் ஜனதா தளத்தின் முலயம்சிங் தலைமையிலான அரசு இருந்தது. அது இந்துமத வெறியர்களின் இராமஜென்ம பூமி அரசியலுக்கு மாற்றாக அயோத்தியில் ''ராம கதைப் பூங்கா'' அமைக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது.

இந்துமதப் பொய்மைகளைப் பயன்படுத்தி ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - வி.இ.ப. பாசிஸ்டுகள் தமது இந்துத்துவக் கோட்பாடுகளை நியாயப்படுத்துகின்றனர். இந்துமதப் பொய்மைகளை அம்பலப்படுத்தி இந்துத்துவக் கோட்பாடுகளை முறியடிப்பதற்குப் பதில் இந்துமதப் பொய்மைகளுக்கே மதச்சார்பின்மை மதச் சகிப்புத்தன்மைகள் இருப்பதாக வியாக்கியானம் செய்து அரசியல் ஆதாயம் அடையும் நோக்கம் கொண்டதுதான் இந்த ''ராம கதைப் பூங்கா''த் திட்டம்.

''மாபெரும் இதிகாசமாகிய இராமாயணத்தின் பண்பாட்டு அம்சத்தை உணர்த்துவதற்காக... அயோத்தி நகரை ஒரு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தோடு முன்னேற்றும் பூங்காவை நிறுவுவதற்காக... இராமன் வாழ்க்கையின் சடங்கு - சாத்திர அம்சத்திற்குப் பதிலாக நிகரற்ற, தத்துவ அம்சத்தை வலியுறுத்தி ஒரு பரந்த பார்வையையும், மதச்சார்பற்ற கண்ணோட்டத்தையும் உயர்த்திப் பிடிக்கும் நோக்கமுடையதுதான் இந்த ராம கதைப் பூங்கா'' என்று அப்போது விளக்கப்பட்டது.

இதற்காக பாபரி மசூதிக்குச் சற்றுத் தள்ளியிருந்த 55.7 ஏக்கர் நிலத்தை உ.பி. அரசு கையகப்படுத்தி வைத்தது. அதன் பிறகு அம்மாநிலத்தில் பா.ஜ.க. அரசமைந்தது. அது பாபரி மசூதியை ஒட்டியுள்ள 2.77 ஏக்கர் அளவு இசுலாமியர்களின் கல்லறைப் பகுதியையும் 1991-இல் கையகப்படுத்தியது. ''அயோத்தியில் யாத்திரிகர்களின் வசதியைப் பெருக்கவும் சுற்றுலாத் தொழிலை வளர்க்கவும் அந்த நிலம் பயன்படுத்தப்படும்'' என்று விளக்கமளித்தது.

''ராம கதைப்பூங்கா'', யாத்திரிகர்களின் வசதி மற்றும் சுற்றுலா வளர்ச்சி என்று கூறி உ.பி. அரசு கையகப்படுத்தியிருந்த இந்த 67 ஏக்கர் நிலத்தில்தான் 43 ஏக்கர் நிலத்தை உ.பி. பா.ஜ.க. அரசு விசுவ இந்து பரிசத்தின் ராமஜென்மபூமி அறக்கட்டளைக்கு ''ராம கதைப் பூங்கா''வை நிர்மாணித்துப் பராமரிக்கும் நோக்கத்துக்காக மட்டும் நீண்டகால குத்தகைக்குத் தானமாக அளித்துள்ளது.

1991-இல் பா.ஜ.க. அரசு மசூதியைச் சுற்றியுள்ள கல்லறைப் பகுதியைக் கையகப்படுத்தும் ஆணையை எதிர்த்து லக்னோ உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் 1992 டிசம்பர் 11 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. கல்லறைப் பகுதியை உ.பி. பா.ஜ.க. அரசு கையகப்படுத்தியதும் அதை ராமஜென்மபூமி அறக்கட்டளைக்குத் தானமாக அளித்ததும் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் இரத்து செய்தது. ''ராம கதைப் பூங்கா'' அமைப்பது என்கிற பெயரில் ராமஜென்ம பூமி அறக்கட்டளைக்கு 43 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்பட்டதும் முறையற்றது என்று அந்த வழக்கின் தீர்ப்பில் நீதிபதிகள் கண்டித்துள்ளனர்.

**42 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு விட்ட நில உடமையாளர் யார் என்கிற உண்மைபற்றி இந்துமத வெறியர்கள் மூச்சு விடுவதில்லை. பாபரி மசூதி பகுதி தவிர சுற்றியுள்ள 67 ஏக்கரும் தமக்குத்தான் சொந்தமானது; மத்திய அரசு கையகப்படுத்தியுள்ள இந்த நிலத்தைக் கோரிப் பெறத் தமக்கு உரிமையுள்ளது என்று இந்து மதவெறியர்கள் சாதித்து வருகின்றனர்.**

குத்தகை ஒப்பந்தத்தின் 3-வது பிரிவின்படி, சுற்றுலா வளர்ச்சி நோக்கத்துக்காக உ.பி. அரசு திட்டமிட்டுள்ள ''ராம கதைப் பூங்கா''வைக் கட்டியமைத்து, பராமரிக்கும் பொறுப்பை ராமஜென்ம பூமி அறக்கட்டளை மேற்கொள்ள வேண்டும். அதன் 4-வது பிரிவின்படி, நிலத்தின் நிரந்தர உடமையாளர் என்கிற முறையில் உ.பி. மாநில அரசு அந்த நிலத்திற்குள் புகுந்து மேற்பார்வையிடவும், கட்டுமானப் பணிகளையும், புதுப்பித்தல், சீரமைத்தல் முதலிய பராமரிப்புப் பணிகளைக் கண்காணிக்கவும் உரிமை உடையது. ஒப்பந்தத்தை மீறும் பட்சத்தில் அதை இரத்து செய்வதற்கும் உடைமையாளர் என்கிற முறையில் உ.பி. அரசாங்கத்துக்கு அதிகாரம் உள்ளது. அந்த நிலத்தில் எந்தவிதக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கும் மாநில அரசாங்கத்தின் முன் அனுமதி பெற வேண்டும். அறக்கட்டளை உறுப்பினர்களை மாற்றினாலோ, நியமித்தாலோ அரசுக்குத் தெரிவித்தாக வேண்டும்.

''ராம கதைப் பூங்கா'' அமைப்பதற்காக அரசு கையகப்படுத்திய நிலத்தை ராம ஜென்ம பூமி அறக்கட்டளையிடம் ஒப்படைத்ததே ஒரு மோசடியாகும். ''அறக்கட்டளையின் முதல் நோக்கம் ராம ஜென்ம பூமியில் சிரீ ராமனுக்குக் கோவில் கட்டுவதும் அதைச் சுற்றிலும் உள்ள பகுதியை அழகுபடுத்துவதும்தான். ராமன் கோவிலை மறுநிர்மாணம் செய்து சிலைகளை அங்கே அமைப்பதும் திட்டத்தின் பிறநோக்கங்களாகும். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் அறக்கட்டளை என்பது மத அடிப்படையிலானது. அறக்கட்டளையின் உறுப்பினர் விசுவ இந்து பரிசத்து மற்றும் ராஷ்ட்ரீய சுவயம் சேவக் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்'' என்று லக்னோ உயர் நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது.

''குத்தகைதாரராகிய ராம ஜென்ம பூமி அறக்கட்டளைக்கு உண்மையில் ''ராம கதைப் பூங்கா'' அமைப்பது நோக்கமல்ல. அது பகிரங்கமாக அறிவித்துக் கொண்ட நோக்கம் கோயில் கட்டுவது தான். குத்தகைக்கு நிலமளிப்பது என்பது ஒரு பொது நலக் காரியமல்ல. வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள ஒரு தரப்புக்குச் சாதகமாக அளிப்பதாகும்'' என்றும் அந்தத் தீர்ப்பு கூறுகிறது.

ஆக, ''ராம கதைப்பூங்கா'' அமைப்பதற்காகவென்று கூறி ஒப்பந்தம் போட்டு, குத்தகைக்கு வாங்கிய நிலத்தில் ராமன் கோவில் கட்டுவதற்கு முயற்சிப்பதே ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். இடிக்கப்பட்ட மசூதிக்குச் சுற்றிலும் உள்ள 2.77 ஏக்கர் நிலம் இசுலாமியர்களின் கல்லறைப் பகுதியாகும்; அதை உ.பி. அரசு கையகப்படுத்தி, ராமஜென்ம பூமிக்குத் தானமாக வழங்கியது செல்லாது என்று ஏற்கனவே உயர் நீதிமன்றத் தீர்ப்பும் உள்ளது. இடிக்கப்பட்ட பாபரி மசூதி இருந்த நிலம் மற்றும் கல்லறை தவிர அதைச் சுற்றிலும் உள்ள 67 ஏக்கர் நிலம் பிரச்சினைக்கு அப்பாற்பட்டது, இந்துமத அமைப்புகளுக்குச் சொந்தமானது என்பது ஒரு மோசடியாகும்.

குத்தகை ஒப்பந்தம் அப்பட்டமாக மீறப்பட்டிருக்கிறது; அந்த நிலம் குத்தகைக்கு விடப்பட்டதே பித்தலாட்டமும் மோசடியும் மிக்க செயலாகும். அரசுக்குச் சொந்தமான அந்த நிலத்தை இந்து அமைப்புகளுக்குத் தரவே கூடாது என்று வாதி இசுலாமியர் உட்பட நாட்டின் குடிமக்கள் அனைவரும் கோரும் உரிமை உடையவர்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# உழவுக்குத் தேவைப்படாத காளைகள்

*'நாட்டை மீண்டும் காலனியாக் காதே', 'விவசாயத்தை அழிக்காதே' 'உலக வர்த்தகக் கழகத்திலிருந்து வெளியேறு' - என்ற முழக்கங்களை முன் வைத்து சென்ற மே நாளன்று ம.க.இ.க, வி.வி.மு, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் திருவாரூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உசிலை வட்ட வி.வி.மு. தோழர் சிவகாமு ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகளை வெளியிடுகிறோம்.*

**வியாபாரியிடம் கொள்முதல்! விவசாயிக்குத் தடியடி!**

பாப்பா நாட்டுக்கு விசாரிக்கப் போயி ருந்தேன். 940 கொள்முதல் நிலையங்கள மூடிட்டாங்களாம். ''கொள்முதல் நிலை யங்களைத் திற! நெல்லை அரசாங்கமே கொள்முதல் செய்!'' அப்படின்னு ஒரு கோசம் வச்சிப் போராடிருக்காங்க. அதான் அரசாங்கம்ன்னா உங்களுக்குத் தெரியுமே.

போலீச அனுப்பி விட்டுட்டாங்க. வந்து பாத்தா போலீசு சரமாரியா அடிச்சி ருக்கான். அடி பொறுக்க முடியாம இந்தக் கூட்டத்தில இருந்த ஒரு ஆளு நானும் ரெட்டல கட்சிதாண்டா ஜெயலலிதா ஆளு - அடிக்காதன்னு இப்பிடி ரெண்டு வெரல நீட்டிருக்கான். அடிச்ச அடில வெரல ரெண்டாப் பொளந்துப்புட்டாங்க.

அது எவனா இருந்தாலும் அடிதான். அங்கப் போயி கேக்குற எடத்துல சொல்றாங்க. ஈயம் பூசுற ஒரு அப்ராணி ஒக்காந்துருக்கான்.. அவன அடிச்சுப் புழிஞ்சுப்புட்டாங்க. நாயிக்கி நல்லவன் கெட்டவன் தெரியுமா?

இப்புடி அடியக் குடுத்து முடிச்சதுக் கப்புறமும் என்ன நிலமை? வாங்க மாட்டாம நெல்லு நிக்கிது. கேட்டா அவுக சொல்றாக, இப்ப நெல்லு குடௌன் எல்லாம் ரெம்பிடுச்சாம்... எப்பிடி றான்னா விவசாயி குடுக்குறதுக்குப் பதிலா வியாபாரி கொணாந்து கொடுத்தான் - வாங்குனேன்றான். இப்ப விவசாயி என்ன பண்றது? கழுத்த அறுத் துக்குறதா?

சரி.. கடங்காரனாவது நெல்ல எடுத் துக்கிட்டுப் போவானான்னா... ''நீயே விக்க முடியாமத்தான் நெல்ல குடுக்குற கொறச்சுக் குடுறா''ங்கிறான். ஒரிசினல் பொன்னி நெல்லு... சூப்பர் நெல்லுங்க 270 ரூவா 300 ரூவாக்குள்ள வித்துக் கிட்டிருக்குது. இதெல்லாம் என்ன கொடும. 230-க்கு ஒரு மூட யூரியா விக்கிது. அதே 230 ரூவாக்கி 72 கிலோ மூட பொன்னி நெல்லு வித்துக்கிட்டி ருந்தா என்ன அர்த்தம்? எப்புடி விவசாயி வாழ முடியும்?

**கெடுக்க நினைத்தால் நிலத்தைக் கொடு!**

எங்க தோழர் ஒருத்தர் சொன்னாரு. ஒருத்தன கெடுக்கணும்னு வச்சிகிடுவம் தோழர்... அது ரொம்ப சுலபம். அவன போயி வெட்டி குத்தி... கோர்ட்டு, கேசுன்னு பார்க்க வேணாம். சந்தோசமா ''வாப்பா''ன்னு கூப்பிட்டு அவனுக்கு ஒரு 2 ஏக்கர் நிலத்த குடுத்துட்டோம்னு வெச்சுக்க. அப்படியே விவசாயம் பண்ணியே செத்துடுவான்னாரு.

எவன் விவசாயம் பண்றானோ அவன்தான் இந்த நாட்டில மிகப் பெரிய தண்டனைய அனுபவிக்கிறான். அவ னுக்கு ஆயுள் தண்டனை. ஒருத்தனுக்கு மட்டுமில்ல. பொண்டாட்டி, புள்ள, குடும் பத்துக்கே தண்டனை. நெலம் வாங்கிட் டான்னு வச்சுக்க... அன்னிக்கி கடனை ஆரம்பிச்சவன் அறுக்குற வரைக்கும் கடன், அடுத்த கடன், அடுத்த கடன்... நெலத்தையும் விட்டுப் போக முடியாம கடனும் கட்ட முடியாம... மருந்து குடிச்சு சாகவேண்டியதுதான். பேப்பர எடுத்துப் பாருங்க. எங்கயாவது ஒரு மூலையில விவசாயி செத்துக்கிட்டே இருப்பான். கர்நாடகத்துல விவசாயி செத்தான், தமிழ் நாட்டுல விவசாயி செத்தான்... கடன் பட்டு கடன்பட்டுச் சாகுறான்.

**பருத்தி புழுவாய்க் காய்த்தது!**

பசுமைப்புரட்சித் திட்டத்தின் கீழ நாசமாப் போச்சு விவசாயம்... பருத்தி சொன்னான்னு நட்டோம். அவன் சொன்ன மருந்தடிச்சோம். அவன் சொன்ன ரகத்த மாத்தி மாத்திப் போட்டோம். எம்.சி. ஃபைவ்ன்னான், ஓகாண்டான்னான், வரலச்சுமின்னான் என்னன்ன ரகமோ அத்தனையும் போட்டோம். மருந்துல பெங்குவினு, மோனோ குரோட்டா பாஸ், சிந்தாலு... என்னென்னவோ மருந்த சொன்ன தெல்லாம் அடிச்சோம்... கடைசிக்கிப் பாத்தா புழு வந்து தின்னுச்சு. 1986 - நான் விவ்சாயத்தை விட்டு வெளியேறுனது. அந்த வருசம்தான் புளுடோனியா புழு வந்தது. அந்த புழு வந்தோண்ணே அரண்டுபோய் விவசாயி பருத்திய கம்ப்ளீட்டா விட்டான்.

**உழைத்த காசை கிணற்றில் போட்டோம்!**

பசுமைப்புரட்சித் திட்டத்துக்குப் பின்னாடி நெல் உற்பத்தி கடகடகடன்னு கூடிச்சி. நான் என் சொந்த அனுபவத்தி லேர்ந்து சொல்றேங்க. 25 வருசத்துக்கு முன்னால இருந்த பழைய உற்பத்தி முறையிலிருந்து இந்தப் புதிய உற்பத்தி முறைக்கு மாறும்போது என்ன ஆச்சுன்னா தண்ணி ஆட்டமேட்டிக்கா. நெலத்துல கொறஞ்சுக்கிட்டே இருக்கு. ஒவ்வொரு வருசமும் கூடுதலா நெல் அடிக்கிறத வித்து வித்து வித்து நான் கெணத்துலதான் போட்டேன். ஏன்னா அடுத்தடுத்த வருசம் தண்ணி இல்லாமப் போகுது... ரெண்டு ரெண்டு கெஜமா ஒவ்வொரு வருசமும் கிணறு வெட்டி வெட்டி இந்த நெல்ல உற்பத்தி பண்ற காசு பூர உள்ள போயிட்டே இருக்கு.

அப்புறம் பாத்தா போர் மிசின் கொணாந்து எறக்கிட்டாங்க. கெணறு வெட்டாமலே கெணத்துக்குள்ளேயும் போர் போடலாம். வெளிலயும் போர் போடலாம். அதுக்கு அடுத்த வருசம் வந்த வெள்ளாமையில மிச்சம் புடிச்சு மிச்சம் புடிச்சு, போர் போட்டு போர் போட்டு, இன்னக்கி 400 அடி 600 அடி. எல்லா ஊர்லயும் தொளச்சுப்புட்டாங்க.

> *காலப் போக்குல எட்டப்பன் எவன்னு தெளிவாக் கண்டுபிடிக்க முடியாது. காங்கிரசும் அதத்தான் பண்றான் பி.ஜே.பியும் அதான் பண்றான். கருணாநிதியும் அதத்தான் பண்றான். ஜெயலலிதாவும் அதத்தான் செய்யிறா. ஆனா பாக்க ரெண்டு பேரும் அடிச்சு மல்லு கட்டிக்கிறாங்க எதிர்க்கட்சி மாதிரி.*



படிப்பகம்

www.padippakam.com

வீட்டுக்கு வீடு போர் போட்டாச்சு. கிராமப்புறங்கள்ள கிணறு தவறாம சைடு போர், நெட்டு போர், ஒரு குண்டுக்கு ஒருக்கா போர்.

அதுக்கு பம்ப் செட்டு, சக்கிங் மெசினு அதுக்கு ஜெனரேட்டரு, கரண்டு இல்லாட்டி போனா ஆயில் மோட்டர்... 25 வருசமா உழைப்பும் போச்சு, வருமானமும் போச்சு. இது பூர எங்கடான்னா கடங்கொடுத்த அமெரிக்காவுக்கும், பூச்சி மருந்து கொடுத்த அமெரிக்காவுக்கும், இயந்திர சாதனம் கொடுத்த அமெரிக்காவுக்கும் போய்ச் சேர்ந்துடுச்சு.

**நாமெல்லாம் உழவுக்குத் தேவைப்படாத காளைகள்!**

அய்யா... ஒரு காலத்தில மாடு வச்சிருந்தோம். அப்ப உழவுக்குத் தேவைப் பட்டுச்சி. எங்க வூட்டுல எங்கப்பன் சொல்வாரு, காளக்கன்றா, செத்த பாலு விட்டுப் பீச்சுடான்னுவாரு. ஏன்னா காளக்கன்னு 2,3 வருசத்துல உழவுக்கு வந்துடும். இன்னிக்கு உழவுக்குக் காளை மாடு தேவையில்லாமப் போச்சு. ஒரு பொட்டக் கன்னுன்னா அது செனப் புடிக்கும்போது 6,7 ஆயிரம் ரூபா மதிப்புக்கு வந்துடுது. அதனால மாடு காளக்கன்னு போட்டுச்சுன்னா அத இரண்டே நாள்ல பாலில்லாம கொன்னுடுறாங்க. மாடும் கன்னில்லாமயே அனுசரிச்சு பீச்சிடுது. பீச்சிலன்னா அப்புடியே வக்கல கிக்கல திணிச்சு சமாளிச்சுக்கிறாங்க.

எப்புடி பொம்பளப் புள்ள இம்சன்னுட்டு பொம்பளப் புள்ளையக் கொல்றதுக்கு முயற்சி பண்றோமோ, எப்புடி பால்மாடு காளக் கன்னு போட்டுட்டா அது தேவையில்லன்னு மனப்பூர்வமா, தைரியமா, தாட்டியமா, சந்தோசமா செஞ்சும்புட்டு பக்கத்து வீட்டுலயும் பிரச்சாரம் பண்றோமோ... அப்படி உலக வங்கி மற்றும் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகள் இந்தியா போன்ற காலனி நாடுகள்ல கேண கிறுக்கன் அப்புராணியா இருக்குற ஆளுங்கள்ளாம் ஒரு குறிப்பிட்ட ஆளவு கொன்னுடணும்னு முடிவு பண்ணிட்டாங்க. அதான் நடந்துக் கிட்டிருக்கு.

**மீட்டர் உண்டு கட்டணம் இல்லையாம்!**

மத்திய அமைச்சர் ஒத்தன் சொல்றான்... இலவச மின்சாரம் கொடுக்கக் கூடாது என்பது மத்திய அரசினுடைய தேசியக் கொள்கை அதைத் தமிழ்நாட்டுல சரியாக் கடைபிடிக்க மாட்டேன்றாங்க. நாங்க அந்த அம்மாவக் கூப்பிட்டுப் பேசுவோம்ன்றான்.

இந்தம்மா என்ன சொல்லுதுன்னா "அதெல்லாம் கிடையாது.. மத்திய அரசு வேற, நாங்க வேற. விவசாயிகளுக்கு ஆண்டிப்பட்டி தேர்தல்லயே சொல்லிப் புட்டோம். இலவச மின்சாரம் கொடுப்போம். நான் சொன்னா சொன்ன மாதிரி நடக்குற ஆளு. ஆனா எங்களுக்கு கரண்ட் எம்புட்டு வேஸ்ட் ஆகுதுன்னு தெரியமாட்டேன்னுது. அந்த பம்ப் செட்டுகிட்ட ஒரு மீட்டர வச்சி அத அளந்து கண்டுபிடிச்சி, என்னதான் செலவாகுதுன்னு ஒரு கணக்கு வேணுமில்ல. ஆத்துல போட்டாலும் அளந்து போடணும்னு சொல்வாங்கள்ள. அதனால மீட்டர் வைக்கப் போறோம். அதாவது, தெராசு தொங்கும் நிறுத்துப் போட



மாட்டோம், நிறுத்துப் போட்டாலும் காசு வாங்க மாட்டோம்" அப்புடி ஒரு கணக்கு செய்யிறதா அந்தம்மா பேசிக்கிட்டிருக்கு. நாம எத நம்புறது?

**அழுகுணி ஆட்டம்**

பள்ளிக்கூடத்துல பிள்ளைக படிக்கிது இல்லீங்களா. அங்க 6-ம் வகுப்புப் புள்ளங்களுக்கெல்லாம் ஒரு ஓட்டப் பந்தியம் வப்பாங்க. அப்புறம் 10-ம் வகுப்புப் புள்ளங்களுக்கெல்லாம் ஒரு ஓட்டப்பந்தயம் வெப்பாங்க. ஒரு எட்மாஸ்டர் வந்து 'இதெல்லாம் நல்லா இல்ல. ஸ்கூல் பூரா ஒண்ணுதான். யார் வேணாலும் ஓடிக்கலாம். செயிச்சுக் கலாம்' அப்புடீன்னு சொன்னா, எப்பவுமே 10-ம் வகுப்புப் பயங்கதான் ஜெயிப்பான். அமெரிக்காவும் நம்மளும் சர்வதேச அளவுல ஒண்ணா வரவு செலவு பண்ணிக்கலாமாம், ஒண்ணா வியாபாரம் பாத்துக்கலாமாம். இது எப்புடி நடக்கும்.

ஐரோப்பிய நாடுகள்ல 10 ஆயிரம் மாட்ட வச்சு பால் பீச்சுறான். அதுக்கு பேர் பண்ணை. நாம ஒத்த மாட்ட வெய்யில்ல புடிச்சிக்கிட்டு நாமும் வெயில்ல நின்னு மேச்சுக்கிட்டு சாகுறம். இது நம்ம விவசாயி நிலம. இவன் எப்புடி 10,000 மாட்டு பால் பண்ண கூட போயி போட்டி போட முடியும்? இங்க யாரும் பால் குடிக்க மாட்டேன்றான். கையில காசே கிடையாது. இப்புடி இந்த ஏற்றத்தாழ்வான ஒப்பந்தத்தை நாம எப்புடி புரிஞ்சுக் கொள்ள வேணும்ன்னா, அது ஒரு அடிமைச் சாசனம்.

**பார்த்தா வாழைத்தோப்பு...**

காலனின்னா என்னங்க? காலனின்னா அவனவன் வெளிலேர்ந்து வந்து குடியேறிட்டான்னு அர்த்தம்.

அதாவது தோலிருக்க சொள முழுங்கின்னு சொல்வாங்கல்ல... உள்ள இருக்குற பழத்தப் பூரா தின்னுட்டு களிமண்ண திணிச்சி திணிச்சி வச்சானாம் வாழத் தோட்டத்துக்குள்ள. அப்புடி பாக்குறத்துக்கு இந்தியா மாதிரி தெரியும். பாக்குறத்துக்கு நம்ம போலீசு மாதிரி தெரியும். பாக்குறதுக்கு நம்ம ஆளு ஆள்றது மாதிரித் தெரியும். கடசிக்கிப் பார்த்தா எல்லாம் வெளிநாட்டுக்காரன்.


காலப் போக்குல எட்டப்பன் எவன்னு தெளிவாக் கண்டுபிடிக்க முடியாது. காங்கிரசும் அதத்தான் பண்றான் பி.ஜே.பியும் அதான் பண்றான். கருணாநிதியும் அதத்தான் பண்றான். ஜெயலலிதாவும் அதத்தான் செய்யிறா. ஆனா பாக்க ரெண்டு பேரும் அடிச்சு மல்லுகட்டிக்கிறாங்க எதிர்க்கட்சி மாதிரி. கருணாநிதி பரவாயில்லன்னு சம்பமா பேசுறான் ஒரு செட்டு... ஜெயலலிதா பரவாயில்லன்னு இங்கிட்டு நிண்டு பேசுறான். ஆஹா... நம்ப இந்துக்கள்ளாம் ஒண்ணு சேரணும்டான்னு அங்கிட்டு ஒரு செட்டு பேசுறான். பாக்கும்போது இரண்டா பிரிஞ்சி அடிச்சா மல்லுகட்டிக்கிற மாதிரி எதிர்க்கட்சி மாதிரி நடந்துக்கிறான்.

இந்த ரெண்டு பேரும் சேர்ந்து ஒரே வேலய ஒரே மாதிரி செய்யிறான். நாட்டு மக்களுக்குச் சொல்ல மாட்டேன்றான். காட் ஒப்பந்தத்தை அப்படியே அமல் படுத்தறான். அந்த அமல்படுத்துறத்துல என்ன சொல்றானோ அதக் கீத்துக் கெடாமக் கேக்குறான்.

இந்த அரசியல் காரணத்தை சரி செய்ய வேண்டுமானால் புரட்சிதான் வேணும். புரட்சிதான் வேணும்னா விவசாயிகள் விடுதலை முன்னணி மாதிரி அமைப்புகள்ள சேந்துதான் ஆகணும். வேற வழியே இல்லை. ●


படிப்பகம்

www.padippakam.com



# ஒன்றைப் பற்றி மட்டுமே சொல்வது தொடர்பாக

சி. சிவசேகரம்
ஈழக்கவிஞர்

நான் ஒன்றைப்பற்றிப் பேசும்போது
இன்னொன்றைப் பற்றிப் பேசுவதுபோல இருக்கிறது என்கிறாய்.
மெய்தான் -
இந்த நாளில் ஒன்றை விலக்கி இன்னொன்றைக் காணுவது
இயலாத காரியம்தான்.

மன்னாரிலிருந்து வெளிக்கிட்ட தற்கொலைப் போராளியின் உடல்
ஜெருசலேம் நகரில் வெடித்துச் சிதறுகிறது.
மட்டக்களப்புக்குப் போகையில் மறிக்கப்படுவோரது அடையாள
அட்டைகள்
இஸ்ரேலியப் படையினனிடம் ஒரு பலஸ்தீனியனால் நீட்டப்படுகின்றன.
திருகோணமலை முற்றவெளியில் பொலிஸ் தேடும் சந்தேக நபர்
ஸ்ரீ நகரில் இந்தியப்படையினரால் கொண்டு செல்லப்படுகிறார்.

பினோஷேயின் சிலியில் காணாமற் போனவர்கள்
சூரியகந்தலிலும் செம்மணியிலும் புதையுண்டார்கள்.
கொழும்புச் சோதனைச் சாவடியில் சிக்குண்ட பெண்ணைத்
தமிழகத்துக் காவல் நாய்கள் தடுப்பு மறியலில் கடித்துக் குதறுகின்றன.

வட இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட இஸ்லாமியன்
அவுஸ்திரேலிய அரசால் அனுமதி மறுக்கப்படுகிறான்.
எல்லா அகதி முகாம்களையும் சூழுகிற வேலி
ஒரே முட்கம்பிச் சுருளால் ஆக்கப்பட்டிருக்கிறது.
எல்லாச் சிறைக் கூடத்துச் சுவர்களும்
ஒரே விதமான அரிகற்களால் எழுப்பப்பட்டுள்ளன.

உலகின் எல்லாத் தடுப்பு முகாம்களிலும் உள்ளவர்கள்
ஒரே மொழியில்தான் இரவில் அலறுகிறார்கள்.
துருக்கியில் குர்தியனுக்கு மறுக்கப்பட்ட மொழியை
இலங்கையில் தமிழன் இழந்து கொண்டிருக்கிறான்.

யாழ்ப்பாண நூலகத்தைச் சூழ்ந்த தீயிலல்லவா
பாபர் மசூதியை இடித்த கடப்பாரைகள் வடிக்கப்பட்டன.

சாவகச்சேரியைத் தரைமட்டமாக்கிய குண்டுகள்
காஸா நகரத்தின் மீது விழுந்து கொண்டிருக்கின்றன.
கிளிநொச்சியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள்
பாமியன் புத்தர் சிலைகளை முடமாக்கிச் சரிக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com


கியூபா மீதான அமெரிக்க வணிகத்தடை
வன்னிக்கு எரிபொருள் போகாமல் தடுக்கிறது.

புலம்பெயர்ந்த உயர்சாதித் தமிழனின் முகம்
கூ-க்ளுக்ஸ்-க்ளான் முகமூடிக்குள் ஒளிகிறது.
இலங்கையில் விதிக்கப்படும் செய்தித் தணிக்கை
அமெரிக்காவிலும் செல்லுபடியாகிறது.

காஷ்மீர் விடுதலைப் போராளியின் உயிர்த்தியாகம்
இலங்கைத் தமிழனுக்காக வழங்கப்படுகிறது.
நேபாளத்தின் கெரில்லாப் போராளி
மலையகத் தமிழ்த் தொழிலாளிக்காகப் போராடுகிறான்.
கொலம்பியாவில் விரிகின்ற விடுதலைப் போர்
இலங்கை விவசாயிகளின்
விமோசனத்துக்கானது
இலங்கைத் தமிழரது இடையறாத போராட்டம்
பலஸ்தீனப் போராளிகட்கு உற்சாகமூட்டுகிறது.

ஒரு நியாயத்தை ஆதரிக்கிற சொற்கள்
இன்னொரு நியாயத்தையும் ஆதரிக்கின்றன
ஒரு கொடுமையை ஏற்கும் சொற்கள்
எல்லாக் கொடுமைகளையும் நியாயப்படுத்துகின்றன.
எனவேதான்
நான் எதைப் பற்றிச் சொன்னாலும்
நீ எதைப் பற்றிச் சொன்னாலும்
எல்லாவற்றைப் பற்றியும் சொன்னது போலத்தான்.

**நன்றி: மூன்றாவது மனிதன்**
**(இலங்கை)**




படிப்பகம்

## ஓவியர் உதயன் மறைவு:

# துணிவில் தோய்ந்த தூரிகை!

ஓவியர் உதயன் மறைந்து விட்டார். மே மாதம் நான்காம் தேதி அவர் மாரடைப்பினால் மறைந்த செய்தியை ஒரு துணுக்கு போல வெளியிட்டிருந்தது தினமணி. அரசியல் கூர்மை வாய்ந்த தனது கேலிச்சித்திரங்களால், தமிழ்ப் பத்திரிக்கையுலகில் தனி முத்திரை பதித்த அந்தக் கலைஞன் இளம் வயதில் மறைந்து விட்டதை ''ஈடு செய்ய முடியாத இழப்பு'' என்று நிச்சயமாகக் கூறலாம்.

அரசியல் நிகழ்வுகளின் முக்கியத்துவத்தையும், ஓர் அரசியல்வாதியின் சாராம்ச மான பண்பையும் புரிந்து கொள்ளும் அரசியல் கூர்மதி ஒரு கேலிச்சித்திரக்காரருக்கு வேண்டும்.

அரசியல்வாதியிடம் அந்தப் பண்பு வெளிப்படும் தருணத்தை சிக்கெனப் பற்றி தனது கோடுகள் மூலம் வாசகன் மனதில் அதை வரைந்துவிடும் ஆற்றல் கொண்ட பிசி றற்ற தூரிகை வேண்டும்.

கதைகள், உவமானங்கள், உருவகங்கள், தொன்மங்கள், பழமொழிகள், மக்கள் வழக்குகள் ஆகியவற்றைச் செறிவாகக் கையாளும் சொல் திறனும், கலைத்திறனும் இணைந்திருக்க வேண்டும்.

எல்லாம் இருந்தாலும் பத்திரிக்கை முதலாளி நாசூக்காகத் தரும் நிர்ப்பந்தங்க ளையும், கேலிக்குள்ளான ஓட்டுப் பொறுக்கிகள் விடுக்கும் மிரட்டலையும் அன்ப ளிப்புகளையும் நிராகரித்து நிற்கின்ற நேர்மையும் துணிவும் வேண்டும்.

உதயன் இவையனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தார் என்பதற்கு அவ ரது கேலிச் சித்திரங்கள் சான்று கூறுகின்றன.

ஜெயலலிதாவின் அருவெறுக்கத்தக்க டாம்பீகம் - ஆத்திரமூட்டும் ஆணவம், நரசிம்மராவின் நரித்தனமான மவுனம், மூப்பனாரின் இட்டுக்கட்டப்பட்ட கவுரவம், கருணாநிதி, வை.கோ., போலி கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதம் - கோழைத் தனம், ரஜினியின் ஆபாசமான அரசியல் வேடம், பா.ஜ.க.வின் இந்து மதவெறி - போலி நாட்டுப்பற்று.. எதையும் விட்டு வைக்கவில்லை உதயனின் தூரிகை.

நாகரீகமாகவும், மழுப்பலாகவும் வெளியிடப்படும் இவர்களது பேச்சை, அதன் உள்ளடக்கத்துக்கு ஏற்ற மொழிக்கு அவர் மொழி பெயர்த்தார். உப்ப வைக்கப்பட்ட இவர்களது பிம்பத்தை, அவரவர் ஆளுமைக்குத் தகுதியான விகிதத்தில் நசுக்கினார்.

உதயனுடைய கேலிச் சித்திரங்களின் அரசியல், கலைத்தரத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், மற்ற சமகால ஓவியர்களின் கேலிச்சித்திரங்களுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவும் வேண்டும்.

கருணாநிதியின் வழுக்கை, மூப்பனாரின் உதடு, ஜெயலலிதாவின் பூசணிக்காய் முகம்... என்று தோற்றத்தைக் கேலி செய்வதையே ஆளுமையைக் கேலி செய்வ தாகக் கருதிக் கொள்ளும் பாமரத்தனம்; ஆரம்பப் பள்ளிகளில் பாடநூலின் விளக் கப்படத்தையொத்த விமரிசனமற்ற ஆளும் வர்க்கக் 'கருத்துப் படங்கள்'; 'சூத்திர அரசியல்வாதிகள்' மீதான பார்ப்பன மேட்டுக்குடியின் வெறுப்பையும், அந்த வர்க்கத்தின் அரசியலற்ற அகம்பாவத்தையும் வெளியிடும் மதனின் கேலிச் சித்திரங்கள்; பத்திரிக்கை முதலாளி வழங்கும் சம்பளம் எனும் கத்தரிக்கோலை மூளையில் வைத்துத் தைத்துக் கொண்ட தூரிகைக் கையாட்கள்...


இத்தகைய முதலாளித்துவப் பத்தி ரிக்கை உலகின் பின்புலத்தில் வைத்து உத யனை மதிப்பிட்டோமானால் அவரது கேலிச் சித்திரங்களின் வீரியம் விளங்கும்.

'அவுட்லுக்' வார ஏட்டின் கேலிச் சித்திரக்காரர் இர்ஃபான், அடையாளம் தெரியாத நபர்களால் டெல்லியில் கொலை செய்யப்பட்டார். கொலைகாரர்களின் அடையாளம் 'இந்து அடையாளம்' என்பது அனைவரின் சந்தேகம். ஆனால் இதுவரை இதற்கு நேரடி சாட்சி இல்லை.


உதயன் மறைந்து விட்டார். பத்திரிகை முதலாளிகளாலும், 'புனிதமான' அவர்களது கருத்துச் சுதந்திரத்தினாலும் அவரது கேலிச் சித்திரங்கள் பல கொலை செய்யப்பட்டி ருக்கும். இதற்கும் நேரடி சாட்சி இல்லை. உதயன் மறைந்துவிட்டார்.

***

***ஓவியர் உதயனின் நினைவாக அவர் வரைந்து தினமணியில் வெளிவந்த கேலிச்சித்திரங்கள் சிலவற்றை இங்கே வெளியிடுகிறோம்.***




www.padippakam.com






படிப்பகம்















www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படக் கட்டுரை:

# தனியார்மயமாகும் கல்வி புதிய மனுதர்மம்!

★ ப. சிவக்குமார்

அரசுக் கல்லூரிகளைத் தனியார் கல்லூரிகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கி விட்டன. தமிழக அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்ற விருப்பதாகவும், உதவி பெறும் கல்லூரிகளுக்கு இனி மானியம் இல்லையென்றும் அறிவித்துள்ளது தமிழக அரசு. இதனை எதிர்த்துக் கல்லூரி ஆசிரியர்கள் போராடுகின்றனர். ஆனால் வரவிருக்கும் ஆபத்தை மாணவர்கள் இன்னும் உணரவில்லை.

தமிழ்நாட்டரசின் 'சனோலா' எண்ணெய் நிறுவனமும், 'டாப்கோ' எனப்படும் கோழி வளர்ப்பு நிறுவனமும் சத்தமில்லாமல் மூடப்பட்டு விட்டன. நிதி நிலை இலாபகரமாக இல்லை என்று காரணம் கூறி தமிழ்நாடு கட்டிட நிறுவனம் (Tamilnadu construction) போன்ற நிறுவனங்களும் மூடப்பட்ட உள்ளன.

இத்தகைய நிறுவனத் தொழிலாளர்கள் விருப்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு உட்படவில்லை என்றால் கட்டாய ஓய்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என தமிழ்நாடு அரசு அறிவித்த போதும், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மத்தியிலோ ஆசிரியர் மத்தியிலோ கொந்தளிப்பு எழவில்லை. மாறாக, அரசு ஊழியர்க்கான கவர்ச்சிகர ஓய்வூதியத் திட்டம் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பு ஒருபுறமும் ஓய்வு பெறும் வயது குறைக்கப்பட்டு விடுமோ என்ற உதைப்பு ஒருபுறமும் அரசு ஊழியர் மத்தியில் எழுந்துள்ளது.

இத்தகைய தொழிலாளர் மற்றும் ஊழியர் விரோதப் போக்குகளை எதிர்த்துத் தொழிலாளர்கள், அரசுத்துறை ஊழியர்கள், ஆசிரியர்கள் போராடும் போது அவர்கள் மீது அனுதாபமோ, அவர்கள் போராட்டத்திற்குள் நியாயம் இருக்கும் என்ற நினைப்போ, பொது மக்களுக்கு ஏன் எழவில்லை என்பதைத் தொழிற்சங்கங்கள் சிந்திக்க வேண்டும். இந்தச் சூழ்நிலை போராடும் தொழிளார்களை ஒடுக்கித் தனியார்மயத்தைப் பாசிச அணுகுமுறையோடு சுலபமாக அமலாக்க அதிமுக அரசுக்கும், மத்தியில் ஆளும் பாஜக அரசுக்கும் வசதியாக உள்ளதல்லவா?

சேவைத் துறைக்காகவும் மக்கள் நலம் மற்றும் கல்விக்கு மானியம் தந்து செலவழிப்பதும் மக்கள் நல அரசின் கடமை என்பதெல்லாம் பழங்கதையாகி விட்டது. கல்வி கொடுப்பது அரசின் கடமை என்பதை பற்றி இப்போது அரசுகள் கவலைப்படவில்லை. நர்சரி பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகள் எனத் தொடங்கி சுயநிதிக் கல்லூரி வரை கல்வி வியாபாரமாகி, அடித்தட்டு மக்களுக்குக் கல்வி, குறிப்பாக உயர்கல்வி எட்டாக்கனியாகி விட்ட நிலையில் உயர் கல்வித் துறையில் தமிழக அரசு எடுத்துள்ள இந்த அதிரடி நடவடிக்கையை நாம் புரிந்து கொள்வது அவசியம். 160 ஆண்டு கால வரலாறு உடைய அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக் கழகங்களின் உறுப்பு கல்லூரிகளாக மாற்றும் சட்டமுன் வடிவைக் கொண்டு வந்து உலக வங்கிக்குச் சேவை செய்யும் தமிழ்நாடு அரசின் உள்நோக்கத்தை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

★★★

அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக இணைப்பதை எதிர்த்தும், உதவி பெறும் கல்லூரிகளுக்கு மானியத்தைக் குறைப்பதை எதிர்த்தும், மாணவர் கட்டணத்தை உயர்த்தக் கூடாதெனவும் அரசு கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்கள், ஆய்வக உதவியாளர்களின் பல்வேறு சங்கங்கள் கடந்த ஒருமாத காலமாக ஆர்ப்பாட்டம், தேர்வுத் தாள் திருத்தும் பணிப் புறக்கணிப்பு, மறியல் என பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கல்வித் துறையில் இதுவரை நடக்காத மோசமான அதிரடி மாற்றத்தைத் தமிழக அரசு உருவாக்கி உயர் கல்வித்துறை சம்பந்தப்பட்ட ஆசிரியர் சங்கங்களை சவாலுக்கு இழுத்துள்ள தருணம் இது.

67 அரசு கல்லூரிகள் பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றும் சட்ட முன்வடிவு மே மாதம் முதல் வாரத்தில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

கல்வித் துறையில் அதிரடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த மாற்றங்கள் பாரதூரமான விளைவுகளை உருவாக்கும்.

அதிமுக அரசு 160 வருட கால அரசுக் கல்லூரிகளின் வரலாற்றை ஒரு சட்ட முன்வடிவு மூலம் சமாதியாக்கி விட்டது. அரசுக் கல்லூரிகள் மூடப்படவில்லையே, அவை பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக ஆனால் என்ன என்று நாம் கருதலாம். 67 கல்லூரிகளில் பணிபுரியும் ஏறத்தாழ 5000 கல்லூரி ஆசிரியர்களும் 3000-க்கும் மேற்பட்ட ஊழியர்களும் அரசு ஊழியர் எனும் நிலையை இனி இழக்கப் போகின்றனர்.

அரசுக் கல்லூரிகளைத் தொடங்கியதிலும், தனியார் கல்லூரிகளுக்கு மானியம் தரத் தொடங்கியதிலும் அப்போதைய பிரிட்டிஷ் அரசுக்கு ஒரு நோக்கம் இருந்தது. அரசுக் கல்லூரிகளின் வரலாற்றில் முதன்முதலாகத் தொடங்கப்பட்ட கல்லூரி என எடுத்துக் கொண்டால் சென்னை மாநிலக் கல்லூரியாகும். 160 ஆண்டுகளுக்கும் முன்னால் தொடங்கப்பட்ட அந்தக் கல்லூரி மேல்தட்டு மக்களும் உயர்சாதியினரும் படிக்கின்ற கல்லூரியாக அந்த நாட்களில் இருந்தது. அன்றைய ஆங்கில அரசுக்கு மெக்காலே திட்டப்படி நிர்வாக எந்திரத்தில் உறுப்புகளாக எழுத்தர்களையும் அதிகாரிகளையும் உற்பத்தி செய்ய கலை அறிவியல் கல்லூரிகள் தேவைப்பட்டன. அதேபோல பாலம் கட்டுவதற்கும், கட்டிடங்கள் கட்டுவ





படிப்பகம்

www.padippakam.com

தற்கும் குறைந்த சம்பளத்தில் உள்ளூர்ப் பொறியாளர்களை நியமிக்கவும் பிரிட்டிஷார் விரும்பியபோது கிண்டி பொறியியல் கல்லூரி தொடங்கப் பெற்றது.

ஒடுக்கப்பட்ட பிரிவினரின் இட ஒதுக்கீட்டுக்குப் பெரியார் போராடிய கால கட்டத்தில் நிர்வாக இயந்திரத்தில் பிற்படுத்தப்பட்டோர் பங்கேற்றதோடு கல்லூரியிலும் படிக்க நுழைந்தனர். அப்போதும் கூட தாழ்த்தப்பட்டோர் பள்ளிக் கல்வி பெறுவதில் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சிக்கல்கள் இருந்தன. அவர்கள் எங்கே கல்லூரியை எட்டிப் பார்க்க முடிந்தது?

பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் கல்விக்காக தனியார் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. நாடார் மகாஜன சங்கங்களின் கல்வி நிறுவனங்கள், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பச்சையப்பன் கல்லூரி, தியாகராயர் கல்லூரி என்பவை சில. நீதிக் கட்சியுடன் தொடர்பு உடையவர்கள், அன்றைய கால கட்டத்தில் தமிழிசைக்குப் போராடியவர்கள் போன்றோர் இத்தகைய கல்லூரிகளின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தனர். (இவை காலப்போக்கில் சுயநிதி வியாபாரச் சந்தைகளானது வேறு கதை).

இந்தக் கல்லூரிகள் எல்லாம் 1857 உட்ஸ் அறிக்கை, ஹண்டர் குழு அறிக்கைக்குப் பின் உருவாக்கப்பட்ட ''உதவிக்கான மான்யம் (Grand in aid) திட்டப்படி'' மானியம் பெற்று வந்தன. தனியார் பள்ளிகளையும் தனியார் கல்லூரிகளையும் தன்னுடைய கட்டுக்குள் வைத்து வளர்ச்சியைக் கண்காணிக்க இந்த மானியத் திட்டத்தை பிரிட்டிஷ் அரசு தொடங்கியது. கல்லூரிகள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாதிரியில் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றன. 140 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த இந்த மானியமுறை இனி உதவி பெறும் கல்லூரிகளுக்கு இல்லை. மானியம் நீக்கப்படுவதால் அந்தச் சுமை முழுதும் மாணவர் கட்டண உயர்வாக மாற்றப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

சென்னைப் பல்கலைக்கழகம் மாநிலக் கல்லூரிக்குப் பின் தோன்றியதாகும். 1923-ஆம் ஆண்டு சட்டப்படி ஆட்சிக்குழு, பேரவை, கல்விக் குழு போன்ற அமைப்புகளின் கட்டுப்பாட்டில் பாடதிட்டங்கள் உருவாக்கப் பெற்றன. சென்னை மருத்துவக் கல்லூரியும், கிண்டி பொறியியற் கல்லூரியும் கூட இந்தப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன.

1947-க்குப் பின் காங்கிரசாரின் ஆட்சியின் போதும், குறிப்பாக 60களில் காமராசர், அண்ணாதுரை ஆகியோரின் ஆட்சியின்போதும் கல்வி விரிவாக்கம் நிகழ்ந்தது. குக்கிராமங்களின் பக்கம் எல்லாம் அரசுப் பள்ளிகளும், கல்லூரிகளும் தொடங்கப் பெற்றன. செய்யாறு, பூலாங்குறிச்சி, ஆத்தூர், திண்டிவனம் போன்ற இடங்களில் தொடங்கப் பெற்ற அரசுக் கல்லூரிகள் அன்றைய அரசின் அணுகுமுறைக்கு உதாரணங்கள்.







**இனிமேல் இந்தியா டுடே பட்டியலிடும் மேட்டுக்குடி கல்லூரிகள் மட்டும்தான் இருக்க முடியும்.**

அன்றைய கால கட்டங்களில் மாநில அரசின் தலைமைச் செயலகம் உள்ளிட்ட பல்வேறு துறை அரசு அலுவலகங்களிலும், மத்திய அரசின் அஞ்சல், தொலைபேசி, இரயில்வே, காப்பீடு, வங்கி போன்ற துறைகளிலும் எஸ்.எஸ்.எல்.சி அல்லது பட்டப்படிப்புடன் பிற்படுத்தப்பட்டோர் பெருமளவில் வேலையில் சேரும் வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

காமராசர் முதலமைச்சராக இருந்த போது பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அமலாக்கமும், அண்ணாதுரை முதலமைச்சராக இருந்தபோது அது தொடரப்பட்டதும், அரசுக் கல்லூரிகள் குக்கிராமங்களில் விரிவாக்கப்பட்டதும் கல்வி தருவது மக்கள் நல அரசின் கடமை என அப்போதைய அரசியல் கட்சிகள் கருத வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. தேசிய அளவில் தொழில் வளர்ச்சி, அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கான தேவை, இவை குறித்து உயர்கல்வியைத் திட்டமிட்ட அப்போதைய மத்திய மாநில அரசுகள் உலக வங்கியின் பிடிக்குள் முழுதும் சிக்காத காலத்தில் அவற்றின் அணுகுமுறைகள் வேறு மாதிரியாக இருந்தன.

இருப்பினும் அன்றைய கால கட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் உயர் கல்வியை நோக்கி வருவதற்கான வாய்ப்பு சமூக மற்றும் பொருளாதார ரீதியில் தடுக்கப்பட்டுதான் இருந்தது. தலித்துகள் வேலை வாய்ப்பு மற்றும் உயர் கல்வியை நோக்கி வருகின்ற இந்தக் காலகட்டத்தில் அரசுக் கல்லூரிகள் இல்லாமல் போவதும், சுயநிதிக் கல்லூரிகள் ஊக்குவிக்கப்படுவதும் இந்த ஆளும் வர்க்கத்தினரின் திட்டங்களை அம்பலமாக்குகிறது.

உயர்கல்வியின் விரிவாக்கம் சாதாரண மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் 3 அரசு பொறியியல் கல்லூரிகளையும், 9 அரசு மருத்துவக் கல்லூரிகளையும், 67 அரசுக் கலைக்கல்லூரிகளையும் தொடங்கிய இந்த அரசுகளின் இன்றைய காலகட்ட நோக்கம் உலக வங்கி நிபந்தனைகள், உலகமயமாதல் தாக்கங்களுக்கு அடிபணிந்து சேவைத்துறையின் செலவினத்தைக் குறைப்பது, கல்வி, உடல்நலம் போன்ற அத்தியாவசியத் துறையிலும் தனியாரை ஊக்குவிப்பது என மாறிவிட்டது.

சாதாரண மக்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்னும் பம்மாத்தை வாக்குகளுக்காகப் பேசிய காலம் கூடப் போய்விட்டது. அடித்தட்டு மக்களைப் பற்றிய அக்கறை ஏதும் இல்லாமல், காசு கொடுத்தால் அரசு மருத்துவமனை, இலட்சம் கொடுத்தால் உயர் கல்வி என மாறி விட்ட நிலையில் இந்த அரசுக் கல்லூரிகளை இணைப்பது அரங்கேறி உள்ளது.

மூன்று அரசு பொறியியற் கல்லூரிகள் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு விட்டன. 67 அரசு கலை அறிவியல் கல்லூரிகளும் சென்னை, மதுரை, காமராசர், பாரதியார், பாரதிதாசன், அன்னை தெரசா, பெரியார், தோற்றுவிக்கப்படவுள்ள திருவள்ளுவர்



படிப்பகம்

www.padippakam.com

பல்கலைக்கழகம் எனப் பிரித்து இணைக்கப்பட்டு விட்டன. அரசு வசமிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் பல கோடி மதிப்புள்ள சொத்துகளும் பல்கலைக்கழகங்கள் வசம் ஒப்படைக்கப்பட உள்ளன.

பல்கலைக்கழகங்கள் அரசின் கட்டுப்பாட்டில் இயங்குபவை தானே, அவைகளுடன் அரசு கல்லூரிகளை இணைத்தால் ஏன் எதிர்க்க வேண்டும் என எண்ணம் எழலாம்.

1986-ன் புதிய கல்விக் கொள்கை தொடங்கி, இன்று பொதுத்துறையில் அரசுப் பங்கு விலக்கல் (disinvestment) சேவைத் துறையில் செலவினத்தைக் குறைத்தல், ஆட்குறைப்பை ஊக்கு வித்தல் எனும் மத்திய அரசின் உலகவங்கி அடிமைச்சாசனச் செயல்பாட்டின் இன்னொரு வடிவம்தான் அரசுக் கல்லூரிகளை பல்கலைக் கழகங்களின் உறுப்பாக்குதல்.

அதிமுக அரசு 160 ஆண்டு கால அரசுக் கல்லூரிகளின் வரலாற்றை ஒரு சட்ட முன் வடிவு வழி மாற்றி எழுதுவதன் மூலம், அரசு ஊழியராக இருந்த ஆசிரியர் மற்றும் ஊழியர்களின் எட்டாயிரம் பணியிடங்களைக் காலி செய்து விட்டது. கீதா கிருஷ்ணன் பரிந்துரைத்த ஆட்குறைப்பு யோசனைக்கும் மேலாகப் போய் நூறு சதவித ஆட்குறைப்பை உயர் கல்வியில் செய்து விட்டது.

''பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு உண்டு, ஓய்வு பெறும் வயது 60 ஆகும், பேராசிரியர் பதவி உண்டு, அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் உறுப்புக் கல்லூரிகளின் செலவினங்களை பல்கலைக்கழக மானியக் குழு உதவியுடன் சந்திக்கும், கவலைப்பட ஏதுமில்லை'' என கல்வி அமைச்சர் சங்கங்களிடம் உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் கூறுவது நடைமுறை ஆவதாக வைத்துக் கொண்டாலும் கூட இந்த எட்டாயிரம் பணியிடங்கள் 'அரசு' என்ற பிரிவிலிருந்து 'பல்கலை' என்ற பிரிவுக்கு மாற்றப் பட்டு விட்ட பின்னர் அரசு எப்படி நேரடியாகத் தலையீடு செய்ய முடியும்? அரசு ஊழியராக இருந்த தொலைபேசி ஊழியர்கள் 'பாரத் சஞ்சார் நிகாமு'க்கு மாற்றப்படுவதும் தனியாருக்குத் தொலைபேசித் துறை தாரை வார்க்கப்படுவதும் மத்திய அரசின் அரசுப் பங்கு விலக்கலின் (disinrestment) பாணி என்றால் அரசுக் கல்லூரிகளைப் பல்கலை உறுப்பு கல்லூரிகளாக மாற்றி எதிர்காலத்தில் அவை முழுவதும் சுயநிதி வகுப்புக் கல்லூரிகளாக மாற்றுவது ஆளுகின்ற அதிமுக அரசின் பாணி.

**சேவைத் துறைக்காகவும் மக்கள் நலம் மற்றும் கல்விக்கு மானியம் தந்து செலவழிப்பதும் மக்கள் நல அரசின் கடமை என்பதெல்லாம் பழங்கதையாகி விட்டது. கல்வி கொடுப்பது அரசின் கடமை என்பதை பற்றி இப்போது அரசுகள் கவலைப் படவில்லை.**

மாணவர்க்கான கட்டணம் உயராமல் பார்த்துக் கொள்வோம் என்று கல்வி அமைச்சர் கூறுவதை எப்படி நம்ப முடியும்? அண்ணா பல்கலைக்கழகம் தனியார் பல்கலைக்கழகம் அன்று. அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக்குழு, மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றின் உதவி பெற்று இயங்குகின்றது அண்ணா பல்கலைக்கழகம். அங்கே முதுகலை இயற்பியல் படிக்க ஆண்டுக்கு 15,000 ரூபாய் கல்விக் கட்டணம், அரசுக் கல்லூரிகளில் முதுகலை பயில 1,500 ரூபாய். இது இணைப்புக்கு முந்தைய நிலை. இந்தக் கட்டண வேறுபாட்டால் அண்ணா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்க முடியாமல் வெளிவந்து அரசுக் கல்லூரியில் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உண்டு.

அந்தந்தப் பல்கலைக் கழகங்களும் மாணவர்க்கான தேர்வுக் கட்டணம், மதிப்பெண் தாள் கட்டணம், பட்டச் சான்றிதழ்க் கட்டணம் ஆகியவற்றைப் பல நூறு மடங்கு ஏற்றி விட்டன. அஞ்சல்வழிக் கல்விக் கட்டணம் மூலம் வசூலாகும் கட்டணமும் பல மடங்கு ஏற்றப்பட்டு விட்டன. எந்தப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவும் மாணவர்க்கு நண்பனாக இருந்ததில்லை. ஆசிரியர் சங்கங்கள் அவ்வப்போது இந்தக் கட்டண உயர்வுக்கு எதிராகக் கூக்குரலிட்டாலும் மாணவர்களை அரசியல்படுத்தி கூட்டுப் போராட்டம் எடுக்கத் தவறியதால் இந்தப் பல்கலைக் கழகங்களில் கட்டண உயர்வைத் தடுக்க முடியவில்லை. பல்கலைக் கழகங்கள் இந்தக் கட்டண உயர்வு, அஞ்சல் வழிக் கல்வி வருமானம், பல்கலைக்கழக மானியக் குழுவின் மானிய உதவி, தமிழக அரசின் நிதி உதவி ஆகிய வற்றால் உயிர் வாழ்கின்றன. இவற்றின் நிதி உதவி நட்சத்திர நிலைக்கு ஏற்ப மாறுவது வேறு கதை. இவை எப்படி மாணவர் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்க முடியும்?

அரசுக் கல்லூரிகளின் இந்த மாற்றங்களைக் குறித்த அபாய அறிவிப்பின் வேர் 1986-ன் **புதிய கல்விக் கொள்கை**யில் இருந்ததைக் காணலாம். புதிய கல்விக் கொள்கையில் உயர் கல்விக்காகச் செலவழிப்பதைக் காட்டிலும் தொடக்கக் கல்விக்காக செலவினத்தை அதிகரிக்க வேண்டும் எனவும், உயர் கல்விக்காக மானியம் தருவதைக் குறைக்க வேண்டும் எனவும், கல்லூரிகளைத் தரப்படுத்தி நிதி வழங்க வேண்டும் எனவும், கல்லூரிகளைத் தன்னாட்சிக் கல்லூரிகளாக ஆக்க வேண்டும் எனவும் தேவைப்பட்டால் 'கல்விவரி' தரவேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது. அவை ஒவ்வொன்றாக நடைமுறைக்கு வந்து விட்டன. அதே நேரத்தில் தொடக்கக் கல்விக்கு இவர்கள் காட்டும் அக்கறை நமக்குத் தெரியாதா என்ன?

**கல்வி வணிகமயமாகி விட்டதாலும், அடித்தட்டு மக்கள் கல்வி பெற வாய்ப்புள்ள அரசுக் கல்லூரிகள் ஒழிக்கப்படுவதாலும் உயர் தொழில் நுட்பம் சார்ந்த நிர்வாகத் தொழில்துறை கட்டுப்பாடு முழுவதும் சாதி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உயர்ந்தவர்களின் கையில்தான் இருக்கும்.**

இவை அமலாக்கப்படுவதாலும் கல்வி வணிகமயமாகி விட்டதாலும், அடித்தட்டு மக்கள் கல்வி பெற வாய்ப்புள்ள அரசுக் கல்லூரிகள் ஒழிக்கப்படுவதாலும் உயர் தொழில் நுட்பம் சார்ந்த நிர்வாகத் தொழில்துறை கட்டுப்பாடு முழுவதும் சாதி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உயர்ந்தவர்களின் கையில்தான் இருக்கும். அடித்தட்டு மக்கள் முறையான கல்வி பெறாமல் வேலை வாய்ப்பும் இல்லாமல் உதிரி வர்க்கமாகத் திரிவது தவிர்க்க இயலாததாகி விடும்.

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

## சிறுகதை:

# நரகல்

● துரை சண்முகம்

"அம்மா ஆயி... ம்மா... ஆயி'

''யக்கா புள்ள வெளிய போயிட்டு வந்துருக்கான். காலு கழுவி விடுங்க'' பக்கத்து வீட்டுச் செல்வி டி.வி. பார்த்துக் கொண்டிருந்த மீனாவைத் தட்டி விட்டாள்.

''நல்ல நாடகம் பாத்துகிட்டு இருக்கு றப்பதான் வந்து புடுங்கி எடுக்கும். த்தே போய் நல்லா இரு, கழுவுறப்ப இன்னும் வருதும்பே! போயி இன்னும் இருந்துட்டு வா!''

''வல்ல, பொயிட்டேன்'' மழலையில் நெளிந்தான்.

''வரும் போயி இரு'' என்று அதட் டிய மீனா வெடுக்கென டி.வி. பக்கம் திரும்பி முனக ஆரம்பித்தாள்.

''போயிட்டேன், கழுவு''. மேல்சட் டையை நெஞ்சு வரைக்கும் சுருட்டிப் பிடித்தபடி காலை அகட்டி வைத்து வாச லுக்கு வெளியே நின்று கொண்டான்.

'கூப்புடுறான்க்கா' என்பதுபோல பார்த்த செல்வியின் பார்வையைப் புரிந்து கொண்டாள் மீனா.

''போன வாரந்தான் அந்த மனுசன் தெனமும் வீட்ல மிசுன வச்சி ரிப்பேர் பண்ணிகிட்டு இருந்துச்சு. இந்த வேலன் நாடகத்த பாக்கவே முடியல, இன்னைக் காவது பாக்கலாம்னா விடுதா பாரு சனி யங்க. இப்படித்தான் செல்வி, இதுங்கள வச்சிகிட்டு ஒரு நாடகத்த கூட ஒழுங்கா பாக்க முடியல. வீட்ல டி.வி. இருக்குதுன் னுதான் பேரு. சூத்த கழுவு, சோற போடுன்னு இதுங்களுக்குக் காவடி தூக்கு றதுல நாம எங்க பாக்கறது. அந்த முரு கனா நடிக்குற புள்ள என்னா முத்து முத்தா பேசுது பாரு. செல்வி! இதுங்கள வச்சிகிட்டு... ஏன்ங்குறே..'' ரொம்பவும் சலித்துக் கொண்டாள்.

வாசல் பக்கம் நின்ற இடத்திலேயே அசையாமல் இருந்த பையன் பார்வை சுவரோரம் ஊர்ந்து கொண்டிருந்த மரவட் டையின் மேல் ஆழ்ந்திருந்தாலும் நொடிக்கொருதரம் ''அம்மா... அம்மா'' என்று அனிச்சைச் செயலாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''நச்சரப்பான் நகருதா பாரு, நொய், நொய்ன்ட்டு நட்டு வச்ச கல்லு மாதிரி அங்கேயே நிக்கும். போய் அக்காகிட்ட கழுவிக்க போடா!''

திரும்பவும் நின்று கொண்டிருந்த வனைப் பார்த்து மீனாவுக்குக் கோபம் தலைக்கேறியது. ''இந்தாடா இப்ப போறியா....? இல்ல...'' என்று சன் டி.வி.யில் செய்திகள் வருவதற்கு முன்பு வரும் உலக உருண்டைபோல விழிகளை உருட்டி நெருப்புப் பார்வை பார்த்தாள். மிரண்டபடி பையன் நகர ஆரம்பித்தான்.

வீடுகட்ட கொட்டிக் கிடந்த மணலில் எதிர்வீட்டுக் குழந்தைகள் ஏறி ஏறி உருள் வதைப் பார்த்து லயித்தபடி இவனும் சேர்ந்து உருள ஆரம்பித்தான்.

''நம்ம வீட்லயும் புள்ளைங்க இருக்கு, சட்டி சோத்த போட்டா மிச்சம் வைக்காம திங்கதான் லாயக்கு, சீத்தா கேக்குற கேள்விக்கு என்னமா அது பதில் சொல்லுது பாரேன். புள்ளங்களையும் பொறுக்கி போடுறான் பாரு..!'' செல்வி யிடம் வேலன் நாடகத்தைப் பார்த்தவாறு வருணித்துக் கொண்டிருந்தாள் மீனா.

''யக்கா அது சீத்தாவோட பொண்ணுக்கா''

''ஆங். பார்த்திபனோட பொண்ணா அது?'' ஆச்சரியத்தோடு இன்னும் ஆர்வ மாகப் பார்க்க ஆரம்பித்தாள்.

''கன்னத்தில் முத்தமிட்டால் இல்ல அதுல நடிச்சது மொத பொண்ணு. இது ரெண்டாவது'', செல்வி அடுக்கிக் கொண்டே போனாள்.

''ரெண்டு பொண்ணுங்களா? என்னமோ நானும் படம் பாக்குறேன். ஒரு எழவும் தெரியமாட்டேங்குது. வீட்டுக்குள்ளேயே இருக்கே, உனக்கு எல்லாம் தெரியுது செல்வி!'' மீனா பாராட்டிக் கொண்டே போக செல்விக்குப் புளகாங்கிதமானது.

***

''யக்கா அண்ணன்''.. செல்வி வேக மாக ஜாடை காட்டிவிட்டு ''வர்றங்க்கா'' என்று புறப்பட்டாள்.

முயல் குட்டி போல டி.வி. பக்கம் தாவிய மீனா அவசரத்தில் டி.வி. சத்தத்தை குறைக்கப் போய் அதை தடு மாறி இன்னும் அதிகமாக வைத்து விட்டு பின் சட்டென தனக்குத்தானே நாக்கை கடித்தபடி டி.வி. சத்தத்தைக் குறைத்து வைத்தாள்.

''டி.வி. சத்தம் தெரு வரைக்கும் கேக்குது. செவுட்டு காதா ஆயிடுச்சா இப்புடி வச்சு கேக்குற'' வீட்டுக்குள் நுழையும் போதே சரவணன் சூடாகிப் போனான்.

மீனா பதிலேதும் பேசவில்லை. ஆனால் முகம் சற்று இறுகிப் போனது.

''ப்பா...'' பையன் மணல் படிந்த கையோடு அருகே வந்தார்.

''டேய் வா இங்க, இந்தா... பிஸ்கட்!'' பாக்கெட்டை அவன் கையில் திணித்தான்.

''ஆமாம் சாப்புடுற நேரத்துல கொடுங்க அது தீனிய தின்னுட்டு சோறே திங்காது'' வெடுக்கென்று பையன் கையி லிருந்த பிஸ்கட்டை மீனா பிடுங்க ஆத்திரம், அழுகையுமாக பையன் கண்களில் கலவை கொப்பளித்தது.

''சரி... சரி... தோ கைய கால கழுவி கிட்டு வந்து அம்மாவ பாத்துக்கறேன். மேல பாரு ஒரே மணலு,'' வெறுங்கையா லேயே தட்டிவிட்டு கை கழுவ அழைத்துப் போனான்.

''ஏய், சுமதி வா இங்க, கூப்புட்ட கொரலுக்கு ஆளு நிக்க மாட்டே. எங்கேதான் பறப்பியோ! சாப்புட வா! தண்ணிய மொண்டு வெய்டி.''

குழம்புப் பாத்திரத்தைத் திறந்து ஒரு துண்டு முள்ளங்கியை எடுத்து வேகமாக வாயில் போட்டுக் கொண்டே தண்ணீர்க் குடத்தில் கையை விட்டாள் சுமதி.

''பறக்குற பாரு! அதுலயும் இதுலயும் கையப் போட்டுகிட்டு கண்றாவி. அதான் வைக்கப் போறேன்ல அதுக்குள் அலையி றியே...'' மகளைத் திட்டிக் கொண்டே தட்டில் சோற்றைப் போட்டு ஒவ்வொரு வருக்காக வைத்தாள்.

''ஏய் இங்க வா அப்பா பக்கத்துல வந்து உக்காரு. ஆ! அப்படித்தான்'' மகனை பாசமாக தலையைக் கோதி விட்டு அருகே உட்கார வைத்துக் கொண்டான் சரவணன்.

''ஏய் புள்ளைக்கு மொதல்ல கொழம்ப ஊத்து'' என்றவன் சுற்றும் முற்றும் பார்த்தபடி மூக்கைக் கசக்கிக் கொண்டான். சற்று நிதானித்து கவனமாக முகர்ந்து பார்க்க ஆரம்பித்தான்.

''என்னங்க, சாப்பிடுறத வுட்டுட்டு என்னமோ மோந்து மோந்து பாக்குறீங்க!''



படிப்பகம்

www.padippakam.com

''ஏதோ நாத்தம் வர்ற மாதிரி இல்ல''

''என்னத்த நாறுது ரேசன் அரிசி நாறித் தொலையுதோ என்னமோ?''

''ச்சே, அரிசி நாத்தமும் வேற நாத்தமும் தெரியாமலா கெடக்கு'' என்று பேசியபடியே சோற்றையும் சந்தேகத்துடன் மோந்து பார்த்தான்.

''இல்லையே எங்கேயோ நாறுதே?''

''ஆமாம்ப்பா... ச்சே... ச்சே'' என்றவாறு சுமதி தட்டைத் தூக்கினாள்.

''தே, நீ வேற, அப்பாவோட சேந்துகிட்டு! முள்ளங்கி கொழம்பு அப்படித்தான் நாறும்'' என்று கிட்டே நெருங்கி வந்தவள் ''ஆமாம் பீ நாத்தம்மாதிரில இருக்கு'' என்று சுற்றும் முற்றும் அவளும் தரையை ஆராய ஆரம்பித்தாள்.

''நீங்கதானே உள்ளாற வந்தீங்க செருப்புல ஏதும்...'' என்று வாசல் பக்கம் போனாள்.

''சேய் இங்க நாறுத அங்க ஓடுற,'' என்று சுற்றும் முற்றும் மீண்டும் ஆராய்ந்த சரவணன் மகன் பக்கத்தில் உற்றுப் பார்த்து ஒரு கணம் பையனை சந்தேகத்துடன் நோட்டமிட்டான்.

பையன் முள்ளங்கியை வாய்க்கும் கைக்கும் இழுத்தபடி மூக்கில் சோற்றுப் பருக்கை ஒட்டியிருக்க அசையாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென ஆராய்ச்சி முடிவைக் கண்டறிந்தவன் போல ''ஏய்... இங்க வா இவன் மேலதான் நாறுது. எழுந்திரிடா எழுந்திரிடா'' என்று வெடுக்கெனப் பையனை கையைப் பிடித்துத் தூக்கி ''ச்சே நரகல மிதிச்சிட்டு வந்திடுச்சி போல இருக்கு, போடா கொல்லைப் பக்கம்!'' வெளியே விரட்ட ''ஆ!'' என்று தட்டை விடாப்பிடியாக இழுத்தவன் பின் ''அப்பா ஆயி... அம்மா'' என்று எதையோ கலவையாகச் சொல்ல வர, எதையும் காதில் வாங்கும் நிதானத்தில் இல்லாத சரவணன் பையனை விரட்டி விட்டான்.

அப்போதுதான் மீனாவுக்கு பையன் வெளிக்கு இருந்து வந்த பிறகு கால் கழுவாமல் விட்டது நினைவுக்கு வரத் தூக்கி வாரிப் போட்டது. பதைபதைப்புடன் பையனைப் பாய்ந்து பிடித்தவாறு ''ஏய் சுமதி இங்க வா!'' என்று மகளையும் சேர்த்து கொல்லைப் பக்கம் இழுத்துக் கொண்டு போனாள்.

''ஏண்டி மாடு, நான் டி.வி. பாக்குறப்பவே உன்னை கழுவி விடுன்னு சொன்னேன்ல. இது கழுவாமலேயே இவ்ளோ நேரம் இருந்துருக்கு. அப்பா கிட்ட சொல்லிடாதே தொலைச்சிடும்'' என்று மகளைப் பயமுறுத்தினாள்.

''எனக்குத் தெரியாதும்மா, நீதான உள்ளாற டி.வி. பாத்துகிட்டு இருந்த,'' சுமதி ஆத்திரத்தில் பதிலுரைக்க ''பேசாத பேசுன இருக்குற கோவத்துல கொன்னுடுவேன்'' என்று மகள் மேல் கோவத்தைக் காட்டினாள்.

''நீ செஞ்சுட்டு என்னச் சொல்லு'' என்பது மாதிரி அம்மாவை வெறித்துப் பார்த்தாள் சுமதி.

சாப்பாட்டுப் பாத்திரங்களை ஓரங்கட்டிய சரவணன் உள்ளுக்குள் ஏதாவது நரகல் ஒட்டியிருக்குமோ என்று ஆராய்ந்தான். 'எங்க போயி ஒட்டிக்கிச்சோ' என்று முனகியபடியே வீட்டுக்குள் நோட்டமிட்டான்.

வழக்கம் போல அங்கு டி.வியைத் தவிர வேறெதுவும் இல்லை. ●





படிப்பகம்

www.padippakam.com

# கேட்டீரோ சேதி!

## பணமா, ஆன்மீகமா?

1965-ஆம் ஆண்டு நியூயார்க்கில் பிரபு பாதா என்ற இந்தியப் பண்டிதரால் தொடங்கப்பட்டது தான் 'இஸ்கான்' என்ற கிருஷ்ண பக்தி அமைப்பு. இதனை 'அரேகிருஷ்ணா' இயக்கம் என்று அழைப்பார்கள்.

அறுபதுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகை தன் வேட்டைக் காடாக, போர்க்களமாக மாற்றிக் கொண்டிருந்த போது அமெரிக்க மக்கள் போருக்கெதிராக உள்நாட்டுக் கலகம் செய்தனர். அந்நாட்களில் பணம் என்ற பிரும்மாண்டமான அச்சில் வார்க்கப்பட்ட அச்சமூகத்தை இளைய தலைமுறையினர் உடைத்தெறியத் துடித்தார்கள்; வேறு மாற்று தெரியாமல் தவித்த அத்தலைமுறையின் முன்னால் பிடிக்கப்பட்ட ஒரு கவர்ச்சியான, பிற்போக்கு பக்தி மசாலாப் போதைதான் இஸ்கான். அந்தப் போதைப் பொருளின் அறிவார்ந்த வியாபாரி பிரபுபாதா.

பிறகு, எத்தனையோ இந்தோ-அமெரிக்க 'ஆன்மீக'க் கம்பெனிகளைப் போல இஸ்கானும் லாபக்கொடி பறக்க வளர்ந்தது; இந்தியாவுக்கும் வந்தது. பிரபுபாதாவின் 11 சீடர்களில் 7 பேர் மீது பாலியல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன; வழக்கம்போல அவை அடக்கப்பட்டன; இந்தியாவிலும் இஸ்கான் உருவாக்கப் பட்டாலும், இந்தியர்கள் உள்ளூர் கோயில் தலைவர்கள் ஆனாலும், உறுப்பினர்களைச் சேர்க்கும் குருபீடத் தலைமை அமெரிக்கத் துறவிகளின் கையிலேயே இருந்து வருகிறது.

இஸ்கானுக்கு உள்ளே அரசல் புரசலாக இருந்த ஊழல்கள் இரண்டு மாதம் முன்பு கொல்கத்தாவில் ஒரு நிர்வாகக் கூட்டத்தில் வெடித்தன. கேள்வி எழுப்பியவர்கள் இரண்டு இஸ்கான் கோயில் தலைமைப் பூசாரிகள். இருவரும் இந்தியர்கள். ''எல்லா அதிகாரங்களையும் பங்கு போடுங்கள், ஆன்மீகம் எங்கள் மயிருக்குச் சமானம்'' என்று வீதியில் ஒண்டிக்கு ஒண்டி நின்றார்கள்.

அமெரிக்க ஆன்மீகக் கம்பெனியின் பின்னே அதிகாரம், பணம் இரண்டும் கலந்து நாறுகிறது. பணத்தைத் துறக்கச் சொல்லி உபதேசித்தவர்கள் பணப்பெட்டிகளைத் திறக்கச் சொல்கிறார்கள்!

***

## மோகம் - விற்பனையில்!

இப்போது உலகின் எல்லாம் வல்ல கடவுள் 'சந்தை' தான்! சந்தைக்காகவே பொருள் தயாரிக்கும் மோகத்தில் இந்திய விஞ்ஞானிகள் எப்போதோ விழுந்து விட்டார்கள். சந்தை - இந்திய ஆணாதிக்க வெறி இரண்டுக்கும் முடிச்சுப் போட்டு ஒரு புதுவகை லிப்ஸ்டிக்கை - உதட்டுச் சாயத்தை உருவாக்கியிருக்கிறார்கள், லக்னோ தேசியத் தாவரவியல் நிறுவன விஞ்ஞானிகள். இந்த வகை லிப்ஸ்டிக்குகள் பெண்களின் எரிச்சல் உணர்வுகளை மாற்றி காமப்பசிக்குத் தூண்டுமாம். இதற்கு 'லவ் ஸ்டிக்' (காதல் குச்சி) என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

இதே உற்சாகத்தில் கண்மை, முகப் பூச்சுக்கான ரூஜ் என்று மேலும் பல விசயங்களைத் தயாரித்து விட்டார்கள் இந்த விஞ்ஞானிகள்.

பெண்கள் மற்றும் சின்னஞ்சிறு குழந்தைகளிடம் கூட 'மேக் அப்' மோகத்தைத் தூண்டி மேட்டுக்குடிக் கலாச்சாரத்தைப் பரப்பி வரும் நிறுவனங்களின் இன்னொரு மோசடி இந்த 'இன்பச் சாயம்' சினிமா மற்றும் சினிமாப் பாடல்களில் 'காதல்' விற்பனைச் சரக்காக இருக்கிறது; அதுபோலவே 'லவ் ஸ்டிக்'!

***

## மெல்லத் தமிழினி வேகமாகச் சாகும்!?

தமிழ்த் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் தமிழில் பேசுவதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழ்போல ஒரு மொழி பேசுகிறார்கள்.

அவர்கள் அழகுப் பதுமைகளாக - புதுப்புது நகைகள், புடவை வகைகளை அணிந்து, வகைவகையான முடி அலங்காரங்கள் செய்து கொண்டு - வந்துபோக வேண்டும்; சொன்ன வேலையைச் செய்ய வேண்டும் - இதுதான் அறிவிப்பாளர்களுக்கு இடப்படும் கட்டளைகள்; அவற்றை அவர்களும் ஏற்கிறார்கள். பிறகு, தயாரிப்பாளர்களின் இழுத்த இழுப்புக்கு ஆடுகிறார்கள்.

அவர்களை எல்லாம் அழைத்து வைரமுத்துவைச் சந்திக்க வைத்தது குமுதம்.

''தமிழை நாம் காப்பாற்ற வேண்டாமா?'' என்று வைரமுத்து கேட்கப் போக, அதற்கு அறிவிப்பாளர்கள் சொன்ன பல பதில்கள் யதார்த்தத்தை வெட்டவெளிச்சமாக்கின. பதில் சொல்ல முடியாமல் வைரமுத்து திணறியது மேலும் பல உண்மைகளை வெளியே கொண்டு வந்தது. இனி, சந்திப்பைப் பாருங்கள்.

*மீனாட்சி:* நாங்க வளர்ந்த சூழலும் எங்க எஜுகேஷன் சிஸ்டமும் தமிழில் எங்களுக்குப் பெரிய பயிற்சியைத் தரல்லையே சார்.

*வைரமுத்து:* ஒப்புக் கொள்கிறேன். அதனால்தான் உங்கள் மீது முற்றும் பிழையில்லை.

*பவித்ரா:* நல்ல தமிழ்ல நாங்க முயற்சி ப்ண்ணினாலும் வேண்டாங்கிறாங்க.

*ஹேமா:* என்னுடைய ஷோவை முடிக்கும்போது 'உங்களிடமிருந்து விடைபெறுவது ஹேமா'



தமிங்கலத்தில் எழுதும் கவிஞரும், பேசும் மேனாமினுக்கிகளும் தமிழுக்காக அழுகிறார்கள்!



படிப்பகம்

www.padippakam.com

என்று சொன்னால், அப்படித் தமிழாக வேண்டாம். 'பை ஃப்ரம் ஹேமா'-ன்னு சொன்னால் போதும்ங்கிறாங்க.

*மீனாட்சி:* 'நன்றி'ன்னு சொல்றது கூட வேண்டாம்னு சொல்லிட றாங்க.

*வைரமுத்து:* அப்படியானால் தமிழர்களுக்கு நன்றியில லைன்னு சொல்றாங்களா?

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

*மீனாட்சி:* அடுத்தவாரம் சந்திக்கிறேன்னு சொல்றதைக் கூட வேண்டாம்னு சொல்றாங்களே.

வைரமுத்து: அதுவந்து தொலைக்காட் சிக்கும் உங்களுக்கும் உள்ள காண்ட்ராக்ட் பிரச்சனையாக இருக் கலாம். (எல்லோரும் சிரிக்கிறார்கள்) அடுத்த வாரம் வரை உங்களுக்கு வாய்ப்பளிக்கலாமா வேண்டாமா என்று முடிவு பண்ணனுமே.

✱ எல்லாம் காண்ட்ராக்ட் (ஒப்பந்தம்) பிரச்சினை என்பது தெரிந்திருக்கிறது வைரமுத்துவிற்கும், அறிவிப்பாளர்க ளுக்கும். அதனால்தான் தாங்கள் சமரசம் செய்து கொள்ளும் இடங்களைப் பற்றிப் பேச்சு வந்தால் அதை விவாதிக்காமல் எல்லோரும் சேர்ந்து சிரித்து கேவலத்தை மறைத்துக் கொண்டுவிடுகிறார்கள்.

✱✱✱

## காலம், பார்ப்பனச் சோதிடன் கையில்!

வெள்ளிக்கிழமை தோறும் 'தினமணி - வெள்ளி மணி'ப் பகுதியில் 'காலம் உங்கள் கையில்' என்றொரு கேள்வி - பதில் பகுதி வருகிறது. தயாரித்துக் கொடுப்பவர்: 'வேத விற்பன்னர்' எம். மல்லிகார்ஜூன சர்மா என்ற ஒரு ஜோசியர்.

இந்த ஆள் எப்பேற்பட்ட சாதி வெறியன் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு (ஆதாரம்: வெள்ளிமணி, 12.4.2002)

***''கே: எங்களுடைய பெண் வேறொரு சாதியைச் சேர்ந்த பையனை விரும்பு கிறாள். அந்தக் காதலில் எங்களுக்கு இஷ்டம் இல்லை. அந்தப் பையன் என் பெண்ணுக்கு எந்த விதத்திலும் ஏற்றவன் இல்லை. கடவுள் அருளால் அவர்கள் பிரிந்து விடுவார்களா? நாங்கள் விரும்பும் இடத்தில் எங்கள்***




*'வேத விற்பன்னர்' எம். மல்லிகார்ஜூன சர்மா, சென்னை.*

***பெண்ணுக்குக் கல்யாணம் நடக்குமா? (பெயர் வெளியிட விரும்பாத வாசகி)***

***ப: மனிதர்களால் முடியாதபோது தெய்வம் துணைக்கு வரும். விதி வலி யது என்றாலும் தெய்வ சக்தி அதை விடப் பல மடங்கு வலிமையானது... இன்னும் ஒரு வருடத்தில் உங்கள் மக ளுக்குத் திருமணம் நடந்து விடும். அந்த மணவிழா நீங்கள் நினைப்ப துபோல் நிறைவேற தாம்பரத்திற்கு அருகே உள்ள ஸ்கந்தாஸ்ரமம் செல்லுங்கள். அங்குள்ள பிரத்தியங் கரா தேவியை வெள்ளிக்கிழமை தோறும் வழிபடுங்கள்... குடும்பத்தில் தெய்வ பலம் கூடும். நல்லது நடப்ப தற்கு நிறையவே வாய்ப்புகள் இருக் கின்றன.''***

✱ பையன் வேறு சாதியைச் சேர்ந்தவன் என்பதே அந்தப் பெற்றோர் எதிர்ப்புக்குக் காரணம். அதனால்தான் 'எந்த விதத்திலும் ஏற்றவன் இல்லை' என்று சொல்கிறார்கள். இந்தச் சோசியன் பதிலில் இரண்டு விசயங்களைக் கவனி யுங்கள். ஒன்று: 'விதி வலியது' என்கிறான்; இன்னொன்று: ''கடவுள் பலம் கூடினால் மணவிழா அவர்கள் நினைப்பது போல நிறைவேறும்'' அதற்கு தாம்பரம் சென்று வழிபட வேண்டும். அதாவது, சாதி மறுப்புத் திரு மணங்கள் பல நடந்து வருவதால் அப்படி நடந்தாலும் 'விதிவலியது' என்று எடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது வழி பாட்டின் மூலம் தெய்வ பலம் கூடினால் நீங்கள் விரும்பும் மணவிழா நடக்கும் என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

அதிருக்கட்டும். கலப்பு மணத்தைத் தடுக்க ஸ்காந்தாசிரமம்; கலப்பு மணம் நடக்க எந்த ஆசிரமம்?

✱✱✱

## மயானம் வரைக்கும் இருக்குது சாதி!

திருத்துறைப் பூண்டி தொகுதி உறுப் பினர் ஜி. பழனிசாமி (சி.பி.ஐ) எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு திராவிட நலத் துறை அமைச்சர் கருப்பசாமி (17.4.2002) சொன்ன பதிலில் அதிர்ச்சிச் செய்தி உள்ளது. அதை எந்த உணர்ச்சியும் இல்லாமல் ஒரு மூலையில் செய்தியாக வெளியிட்டுள்ளது தினமணி.

அதாவது, 2001-ஆம் ஆண்டு ஆதிதிராவிட மக்களுக்காக இடு காடு அமைக்க நிலம் கையகப்படுத்துவ தற்காக 1.6 கோடி ஒதுக்கப்பட்டது. அதில் 1.1 கோடிப் பணம் செலவழிக்கப் படவில்லை.

என்ன காரணம்? ''நிலம் கையகப்ப டுத்துவதற்கு நில உரிமையாளர் தடை யாக இருக்கிறார்கள்... நீதிமன்றங்க ளுக்குச் சென்று தடை ஆணை வாங்கி விடுகிறார்கள்'' என்றார் அமைச்சர்.

தொகுதிப் பேரவை உறுப்பினர்கள் இதுபற்றி மூச்சுக்கூட விடவில்லை. ''நீங்கள் உதவினால் நிலம் கையகப்படுத் தலாம்'' என்று கருப்பசாமி சட்டமன்றத்தி லேயே எம்.எல்.ஏ.க்களைக் கெஞ்சிப் பார்த்து விட்டார்.

இப்படிப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் தான் தங்கள் தொகுதியில் தனித் தேநீர்க் குவளை வைத்து தீண்டாமைக் குற்றம் செய்யப்படுவதைத் தடுக்காமல் தண்டிக் காமல் சாதிவெறியர்களோடு கை கோர்த்துக் கொள்கிறார்கள்;

இப்படிப்பட்ட எம்.எல்.ஏ.க்கள்தான் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் நடந் ததைப் போல தீண்டாமையைப் பின்பற்றி, ஆதிக்கச் சாதிவெறியர்களாக உலா வருகிறார்கள். கசையடி முதல் கொலைகள் வரை தாழ்த்தப்பட்டவர் மீது நடத்திவிட்டு சட்டப்பூர்வமாகவே ''நிரப ராதிகளாக'' அவர்கள் ஊர் சுற்றுகி றார்கள்.

கூரை மீதேறிக் கோணச் சுரைக் காயைப் பறிக்கத் தெரியாத ஆட்கள், அன்று அதே சட்டமன்றத்தில் 'சாதி ஒழிப்புக்கான நோக்கில் பொது மயானம் ஏற்படுத்துவதைப் பற்றி' விவாதித்தார்கள். இதில் போலி கம்யூ னிஸ்டுகளும், தலித் தலைவர்களும் அடக்கம்.

சாதி ஒழிக்கும் நோக்கிலான பொது மயானம் அல்ல, சாதி ஒழிப்புக்கே ஒரு பொதுமயானம் உருவாக்குவதற்குத்தான் சட்டமன்றம் இருக்கிறது.

● குப்பண்ணன்



படிப்பகம்

www.padippakam.com

# குஜராத்: கன்னக்கோல் பூணூல்!



குஜராத் எரிந்து கொண்டிருந்த போது இந்தியன் பெட்ரோ கெமிக்கல்ஸ் என்ற பொதுத் துறை நிறுவனம் அம்பானிக்கு விற்கப்பட்டு விட்டது. இந்தியப் பெட்ரோலியப்பொருள் சந்தையில் சுமார் 65 சதவீதம் இனி அம்பானியின் பிடியில்!

குஜராத் படுகொலையினால் பாரதீய ஜனதா அடைந்த அரசியல் ஆதாயம் இந்து வாக்கு வங்கி, கலவரத்தில் ஈடு பட்ட ஆர்.எஸ்.எஸ். காலிகளுக்கு நகைகள், பணப்பெட்டி, நிலம், வீடு எனப் பல வகையான ஆதாயங்கள். மொத்தத்தில் இழந்தவர்கள் அனைவரும் முசுலீம்கள்.

இந்துக்களுக்கு ஏற்படும் இழப்பைப் பற்றி யாருமே கண்டு கொள்வதில்லை யென ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தொடர்ந்து புகார் செய்வதனால் நாம் அதையும் பரிசீலிப்போம். குஜராத் படுகொலையில் தொடங்கி இன்றைய போர் அபாயச் சூழல் வரையிலான காலத்தில் இந்திய மக்கள் இழந்த சொத்துக்களின் மதிப்பு பல ஆயிரம் கோடி. ''இந்தியா என்பது இந்துக்களுக்கு மட்டும்தான் சொந்தம்'' என்று ஆர்.எஸ்.எஸ். கூறுவதால், அவர்களுடைய கூற்றுப்படி இந்துக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்கள் பல ஆயிரம் கோடி!

முசுலீம்கள் மீது நரேந்திரமோடி தாக்குதல் தொடுத்த அதே பிப்ரவரி - 28-ம் தேதியன்று யஷ்வந்த் சின்கா இந்திய மக்கள் மீது தாக்குதல் தொடுத்தார். அது இனப் படுகொலை; இது பட்ஜெட். கொலை... கொலை... என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தபோது, சத்தம் போடாமல் கொள்ளையடித்து விட்டார் சின்கா. காங்கிரசு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் 'தேசநலன்' கருதி பட்ஜெட் விவகாரத்தைக் கிளறவில்லை.

ஏப்ரல் 1-ம் தேதி: குஜராத் எரிந்து கொண்டிருந்தது; பாராளுமன்றத்திலும் அமளி தொடர்ந்து கொண்டிருந்தது. நீண்ட நாட்களாக நிறைவேற்ற முடியாமலிருந்த ஒரு சதித் திட்டத்தை பா.ஜ. அரசு அன்று நிறைவேற்றி விட்டது. பெட்ரோல், டீசல், எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தைப் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தரகு முதலாளிகளின் கையில் ஒப்படைத்துவிட்டது வாஜ்பாயி அரசு.

அதே ஏப்ரல் மாதத்தில் இந்தியன் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற பொதுத்துறை நிறுவனத்தையும் தனியார்மயமாக்கி விட்டார் அமைச்சர் அருண் ஷோரி. ஆதாயம் அம்பானிக்கு. இந்தியாவின் எண்ணெய் எரிவாயுச் சந்தை அம்பானியின் கட்டுப்பாட்டுக்குப் போகிறதேயெனச் சிலர் கவலை தெரிவித்த னராம். ''பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்து அம்பானியின் 'ஏகபோகத்தை'க் கட்டுப்படுத்துவோம்'' என்று பதில் சொன்னாராம் ஷோரி.

''எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம்'' என்று குஜராத் எரியும்போது திருடப்பட்ட இன்னொரு பொதுத்துறை நிறுவனம் மாருதி. தில்லு முல்லுகள் செய்து மாருதி கார் நிறுவனத்தைக் கைப்பற்ற முயன்ற ஜப்பானின் சுசுகி நிறுவனத்திற்கே அதைத் தங்கத்தட்டில் வைத்து வழங்கி விட்டார் வாஜ்பாயி.

இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் ஆகிய இரு நிறுவனங்களையும் தனியார்மயமாக்கக் கூடாதென்று பாராளுமன்றக் குழு ஆட்சேபம் தெரிவித்திருந்த போதும், ''இந்த ஆண்டிற்குள் இவ்விரண்டு நிறுவனங்களையும் விற்றே தீருவோம்'' என்கிறது அரசு.

அடுத்து, எஞ்சினியர்ஸ் இந்தியா, ஷிப்பிங் கார்ப்பரேசன் ஆஃப் இந்தியா, இந்துஸ்தான் காப்பர் ஆகிய நிறுவனங்களையும் தேசிய உர நிறுவனத்தையும் விற்பதற்கான வேலைகள் குஜராத் எரிந்து கொண்டிருந்த போதே வேகமாக நடந்து கொண்டிருந்தன.

இறுதியாக, சோனியாவும் வாஜ்பாயியும் குஜராத் பிரச்சினையில் வாள் சுழற்றிக் கொண்டிருந்தபோதுதான் உலக வர்த்தகக் கழகத்தின் உத்தரவுப்படி 'காப்புரிமை மசோதா'வை ஒற்றுமையாக நிறைவேற்றினர்.

இப்படி ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள இந்திய மக்களின் சொத்துக்களைக் (ஆர்.எஸ்.எஸ்.ஸின் கூற்றுப்படி 'ஹிந்து சமுதாயத்தின் சொத்துக்களை') கொள்ளையடித்தவர்கள் ஐ.எஸ்.ஐ. ஏஜெண்டுகளோ, மதரஸாவில் பயிற்சி பெற்ற முசுலீம் தீவிரவாதிகளோ அல்லர். காக்கி அரைநிஜார் அணிந்த சுயம் சேவகர்கள்தான்.

'மிருச்ச கடிகம்' எனும் சமஸ்கிருத நாடகத்தில் ஒரு பார்ப்பனத் திருடன் கொள்ளையடிக்கச் செல்வதாக ஒரு காட்சி. திருடப் போன அந்த பார்ப்பான், கன்னக்கோலில் கட்டும் நூலை எடுத்துப் போக மறந்து விடுவான். நள்ளிரவில் திருட வந்த இடத்தில் நூலுக்கு என்ன செய்வது? தனது பூணூலையே கழற்றி நூலாகப் பயன்படுத்திக் கன்னம் வைத்து விட்டு, ''பிராமணனுக்குத்தான் பூணூல் எத்தனை விதங்களில் உபயோகமாக இருக்கிறது!'' என்பான் அந்தத் திருடன்.

பூணூல் மட்டுமா, கலவரமும்தான். கலவரம் கன்னக்கோல் என்றால், அதில் கட்டும் நூல் இன்றைக்கும் பூணூல்தான்.

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

மரபணுக்களும் உட்கருக்காடியும் ஹவுட்டினுடையதாகவே இருக்கும்; அவரது மரபுத் தன்மையையே விந்தணுக்களுக்கும் அவற்றின் விளைவாகும் சந்ததிகளுக்கும் வழங்கும்.

இப்படி மாற்று உறுப்பு பொருத்த நேர்ந்தால், ஹவுட் இறந்துவிட்டாலும் அவரது விந்தணுக்கள் பிளெய்பெர்கின் விதைப்பையில் இன்னும் உயிர் வாழும் அல்லவா? பிளெய்பெர்கின் ரத்தம் வழங்கும் ஊட்டத்தையும் உயிர்க் காற்றையும் உண்டு அவை வாழ்கின்றன. உண்மையில் அதன்பின் திருமதி. பிளெய்பெர்குக்குப் பிறக்கும் குழந்தைகள் அவருக்கும் அவரது கணவன் அல்லாத இறந்துபோன கருப்பருக்கும் பிறந்தவையாகவே இருக்கும். பிறகு என்ன நடக்கும் என்று கற்பனை செய்யுங்கள்.




தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் நிற ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு இந்தக் குழந்தைகள் ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தும்.

அவர்கள் வளர்ந்து திருமண வயதை அடையும்போது வெள்ளை ஆப்பிரிக்கரை மணக்க அனுமதிக்கப்படுவார்களா?

வெள்ளையருக்கென்றே ஒதுக்கப்பட்ட பள்ளிகளில் படிக்கவும், வெள்ளையருக்கென்றே ஒதுக்கப்பட்ட வாகனங்களில் செல்லவும், வெள்ளையருக்கென்றே ஏற்பட்ட உணவகங்களில் உண்ணவும், வெள்ளையருக்கு மட்டுமே உள்ள ஆலயங்களில் வழிபடவும், விதை மாற்றிப் பொருத்தல் நடந்த அதே மருத்துவமனையில் சிகிச்சை பெறவும், இப்படியே பலவற்றுக்கும் இந்த 'வெள்ளையர் அல்லாத' குழந்தைகள் அனுமதிக்கப்படுவார்களா?

இந்த துர்பாக்கிய சாலிகளான குழந்தைகளின் சட்டபூர்வ அப்பா யார் — பிளெய்பெர்கா, ஹவுட்டா?

குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்களில் எங்கேனும் ஹவுட்டின் பெயர் இடம் பெறுமா?

தம் தாயின் கணவனின் குழந்தைகள் அல்ல என்பதால் இந்த அப்பாவிக் குழந்தைகள் சோரப் பிள்ளைகள் என்று முத்திரை குத்தப்படுமா?

எந்த 'ஒழுக்கக் கேடான' செயலையும் செய்யாத அப்பாவியாகவே திருமதி பிளெய்பெர்க் இருந்தாலும், தன் கணவன் அல்லாத ஒரு நீக்ரோவின் குழந்தைகளுக்குத் தாயான சமூக இழிவில் இருந்து அவள் தப்பமுடியுமா?

இன்னொருவரின் குழந்தைகளுக்குத் தாயானவள் என்னும் முறையில் தன் மனைவி நடத்தை கெட்டவள் எனக் குற்றம் சாட்டி பிளெய்பெர்க் - அவர் விரும்பினால் - தன் மனைவியிடமிருந்து மணவிலக்குப் பெற முடியுமா?

மருத்துவ அறிவிலும் அறுவை மருத்துவ அறிவிலும் ஏற்பட்டுவரும் விரைந்த வளர்ச்சி காரணமாக, வருங்காலத்தில், வழங்கியவர் யாரெனத் தெரியாத விந்து மூலம் செயற்கைக் கருத்தரிப்பு ஏற்படுத்தப்பட்டுப் பிறக்கும் குழந்தைகள் ஏராளமான பேர் இருப்பார்கள். வெவ்வேறு சாதிகள், மதங்கள், மொழிகள், நிறங்கள் இனங்களைச் சேர்ந்த மனிதர்களுக்கிடையே இனப்பெருக்கச் சுரப்பிகள் மாற்றிப் பொருத்தப்படுவதன்மூலம் பிறக்கும் குழந்தைகள் ஏராளமான பேர் இருப்பார்கள். சாதிப் பிரிவினையும் இன ஒதுக்கீடும் மலிந்த நாடுகளுக்கும், சில மதங்களுக்கும் கூட அப்படிப்பட்ட குழந்தைகள் புதுவிதமான சிக்கல்களை உருவாக்கலாம்.

ஒரே மதத்தின் உட்பிரிவுகளுக்கிடையிலான திருமணங்களைக் கூட ஆதரிக்காத ரோமன் கத்தோலிக்க திருச்சபை, அப்படிப்பட்ட குழந்தைகளை எப்படி சட்டபூர்வமானவையாகப் பார்க்க முடியும்? ஆர்.சி. திருச்சபை இந்த அப்பாவிக் குழந்தைகளை வேசிமக்கள் எனத் தீர்ப்பளித்துவிடுமா?

***

ஒரு வெள்ளையன் உயிர்வாழ ஒரு கருப்பரின் இதயம் நன்கு பயன்படுகிறது என்னும்போது, ஒரு கருப்பரைக் காப்பாற்ற ஒரு வெள்ளையனின் உறுப்பை மாற்றிப் பொருத்துவதை தென் ஆப்பிரிக்க அரசாங்கம் பொறுத்துக் கொள்ளுமா? அல்லது இந்த நிற வெறி பிடித்த நாடு இத்தகைய உறுப்பு மாற்ற சிகிச்சைகளைத் தடைசெய்ய புதுப் புது சட்டங்களைத்தான் கொண்டு வருமா?

மனிதனால் உண்டாக்கப்பட்ட இந்தச் சாதிமுறை, நிற ஒதுக்கீடு, மதக் கட்டுப்பாடுகள் போன்றவைதாம் எவ்வளவு மடத்தனமாக உள்ளன?!

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

**சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும் இதழின் தபால் உறையின் முகவரியில் சந்தா எண் குறிப்பிடப்பட்டிருக்கும். அதைப் பதிவு செய்து கொள்ளவும்.**

1. **இந்த இதழோடு (ஜூன்'2002) முடிவடையும் சந்தா எண்கள்:**

**11,32,34,35,36,37,38,39, 40,43,47,126,133,138,172, 192,202,203,204,205,206, 207,208,209,210,211,212, 213,215,221,222,271,415, 424**

2. **அடுத்த இதழோடு (ஆகஸ்டு 2002) முடியும் சந்தா எண்கள்:**

**27,41,42,44,45,46,49,125, 140,144,145,146,194,216, 218,219,223,224,226,227, 228,229,230,240,370**


*ஆவி-ஆன்மா-மறுபிறப்பு*


- நூலாசிரியர் : *ஆபிரகாம் டி.கோவூர்*
- *சூலூர் வெளியீடு, 8, பால இல்லம், நஞ்சப்பா குடியமைப்பு, சூலூர், கோயமுத்தூர் - 641 402.*
- விலை : *ரூ. 30/-*
- கிடைக்குமிடம் : *கீழைக்காற்று, 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2, தொ.பே. 8412367*



ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!


PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/Chief PMG - 303 / 2002

www.padippakam.com

# எமது புதிய வெளியீடுகள்







கிடைக்குமிடம்: இரா.சீனிவாசன்
18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை,
அசோக்நகர், சென்னை - 600 083. தொ.பே.: 371 87 06

இரு பாகங்களைக் கொண்ட
ஒவ்வொரு ஒலிப்பேழையும் ரூ.60/-
(அஞ்சல் செலவு தனி)

படிப்பகம்